பிசுமில்லாகிற்றகுமானிற்றகீம்.

இஃது

# அபூஷகமா மாலை

திருப்பாலைக்குடி

## செய்தக்காதிப்புலவரவர்கள்

பாடியது.

—0*0—

இராமநாதபுரம்

இரவுஷாப்புக்கடை-ப-வெ;

## முகம்மதுஇபுறுகீம்சாகிபு

அவர்கள்முயற்சியால்

குலசேகரம்பட்டணம்

சர்க்கரை சா[illegible]பியவர்கள் குமாரர்

## அல்லாபிச்சைப்புலவர்

அவர்களால்

இலக்கணவிலக்கியவமுவறத்திருத்தி

கொன்னூர்

## மாணிக்கமுதலியாரது

மனோன்மணிவிலாசவச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

ஹிஜறத்து-௲௨௱௬௰௧ ௵-ஜமாதுல்அவ்வல் ௴.

பிசுமில்லா ஹிற்றகுமா னிற்றகீம்.

இஃது.

# அபூஷகமாமாலை.

## காப்புவெண்பா

திருமருவு மார்பர் சிருலகெ லாம்போற்ற ... ... *
வருமுமறு பாலர்கதை வாழ்த்தவே - யருவுருவ ... *
மில்லானே யெவ்விடமு மெழிலாக வேநிறைந்த ... *
வல்லானே நீயருளு வாய். ... ... ... ... ... *

## கடவுள்வாழ்த்து.

தொங்கல்.

சீர்மேவியபதி மதினந்தனிற் சிறக்கும்புகழ்நபி திருமாதுலர், கார்மேவியகொடைக் கரத்துமறு கத்தாபருள்பாலர் கருணைநெடும், பார்மேவியபுகழ் அபூஷகமா கதையைப்பகரவான் பருதிமதி, யேர்மேவுலகெல்லாம் படைத்தாள்கிற வேகபெரியவா காப்புத்தானே. (௧)

முத்தாலுலகெல்லாம் படைத்துவைத்த முதலேதுவக்கமுமுடிவுமில்லா, வித்தாரவேதப் பொருளாகிய மெய்யேயருவுரு மெய்யில்லானே, உய்த்தாய்ந்தறிந்தவ ரிதயத்துனைத்துயர்ந்த பெருவாழ்வே யுயருமறு, கத்தாபருள்பாலர் அபூஷகமா மன்னவையைப் புகழ்ந்தேற்பக் காப்புத்தானே. (௨)

ஆயுமறைதெரிந் தேற்றமான அசறுத்தொழுகைமுன் னடைந்துபோந்த, ஞாயிறுமீள வரவழைத்த நயினார்திருமாம ருமறுகத்தாப், சேயின்வரலாறு தனைப்புகலச் செண்டலணிமா மலைகடலுந், தாயபதினெண்ணாயிரவுலகுந் தொகுத்தபெரியோனே துணைசெய்வாயே.

இணைமதிபாரில் அழைத்தேவினோர் கிரியினுடன்பேசுங் கீர்த்தியாளினோர், அருளமொருவேடன் வலைதனிலே யகப்பட்டதைப்பிணையாக்கிமீட்டோர், செருநர்களமீதி லொருபிடிமண் சிதறிப்படைவென்ற திறலுடையோர், கருணைபுரியேகன் றூதரானகபீபு முகம்மதைப் போற்றிசெய்வாம். (௩)

ஒருசொற்குரிசிற ருல்நயினு ருனைக்கமொழிகேளா தாரிலுள்ள, கரிசக்குபிரோர்க ளடர்ந்தேறிய காலேயிருபேருங் கடிதேகியோர், வளையிற்புகுந்துநல் லிறசூலுல்லா மடிமேற்றுயில்காலே வளையில்வந்த, அரவின்கடிபட விடம்நீக்கிய அபூபக்கர்புக அடிபணிவாம். (௪)

சதிருந்தொருநேரந் தொழுகைதன்னை கலாவாக்கினதென்னைக் கருகப்பார்த்தோ, செதிருத்தொருமேவந்த லனுப்பனது நிறைவர்திரு [illegible]ன்னே யிடும்புரைக்க, மதிலூந்திடும்வேளையுரைத்த தூதன்மன்னன் முடி[illegible]தலை சிதமவனாந், தருளுந்திடுமெங்களைப் பிடித்துவெட்டு முமதிரு[illegible]நாம [illegible]துவாமே. (௫)

[illegible]க்குந்திரு[illegible]மறைப் பொருளாகிய வேதநபியிற குல்மருதூர், துளங்குஞ்ச[illegible]வாணிற் பல்கைவரி துணியர்த்தனிலிருந் தெழுதும்வல்லார், களங்கொன்றனுகாத நினோர்கடங் கல்புகுளிரவே கதீதுதிரு, வுளங்கொண்டருள்புரி நெறியுடைய வுதுமான்திருநாமமோதுவாமே.

அகடவிகடமும் ஞரிபுனி யங்கந்தனைப்பிளந் தலனோறிய, பகடுமிருபிளப் பாகவெழு பாரும்பிளந்திட வாள்வீசிவரன், முகடுதடவிய புகழுடையோர் முகம்மதுறகுல்தந் திருமருகர், மகுடமுடிவேந்தர் அலியுல்லாதம் மலர்த்தாளனுதினம் வாழ்த்துவாமே. (௮)

காரார்திருப்புய ஈலிப்புஸியார் தரும்பாலகரிந்தத் தாரணியிற், சேரார்பணிந்திடப் பரியேறியே சிங்கமெனவெற்றித்திறமைகண்டோர், பேராகியவள்ளல் நபியிறகுல் பேரடங்காத பேறுடையோர், காரார்கொடைக்கரத் தசனுசைனின் கமலத்திருப்பாதங்கருதுவாமே. (௯)

மக்கநபியுல்லா திருத்தோழமார் வரிசைச்சகுபிகள் பதம்வாழ்த்தியே, மிக்கபுகழ்சேரும் புகுதாதில்வாழ் மீறூன்முகியித்தீன்பதமிறைஞ்சித், திக்கிலுள்ளநல்ல பெரியோர் பதஞ் சிந்தைதனிலனுதினம் மீளாந்து, ஊக்கனருள்சேரு மபூஷகுமா கதையின்வரலாற்றைக்கவலுவாமே. (௰)

## முன்னூலைகொடுத்தோரியல்.

வல்லடிஜெலியாக்கும் பொழில்சிறந்த மறையினிசையோங்கு மணித்தெருச்சூழ், தொண்டிநகாவாழுஞ் சைதுலெப்பை சுதனுயுலகுள்ளோர் துதிக்கவருங், கண்டிலினிதான மறைப்பொருளோர்கருணைவளர்பீரு முகம்மதெனுங், கொண்டல்பூஷக மாகதிதைக்குலவுந் தமிழினூலைதந்தாரே. (௰௧)

ஆலிமுலகெல்லாம் புகழவரு மறிஞரறிவெனுங் கடல்தனக்கு, மாலீமெனவந்து விளங்கும்பீரு முகம்மதுலெப்பை மணிவாயினால், நாலீதெனக்காட்டிக் கொடுத்தறிவு நுவலுமுறைப்படி தவிராமலே, பாலீதவர்சொல்லும்பக்கத்தாலேபடித்தேன்கவிதையாய்ப்பார்மீதிலே.

## அவையடக்கம்.

எழுத்துச்சொற்பொருளிலக்கியங்க ளெதுகைமோனைச்சொல்லியல்தவிர, எழுத்தமுடனின்ன தெனப்படித்து மறியேன்புலவோர்

க்ளருந்தமிழின், பழுக்தகனிவாயாம் பகரும்வேளை பனிப்போற்செ
வியினும் பருகியின்றால், முழுத்தமுடன்சொன்னேன் குறைகளைந்
து முடிப்போர்புவிமீதிற்சிறப்புள்ளோரே. (௰௩)

சட்டமெழுப்பிய பரிகிரீடம் தரித்தோர்பரி... சொன்ன
ங்போ, லட்டகிரிகுளா கிரிக்குநிக தடுப்புக்கிடுங்கல்லை யறைந்தது
போற், கொட்டமரகதம் தனக்குநேராய்க் கொல்லன்கரியொப்புக்கூ
றுவார்போ, லொட்டதமிழாய்ந்த பாவலர்முன் னொன்றுந்தெரியாதா
னுளாக்கலுற்றேன். (௰௪)

## ஆக்கியோன்பெயர்

சகலபெரியோர்கள் துவாப்பேறுடன் றக்கோன்மகுமத்துந் த
ழைத்துவாழ, மகிழுந்திருப்பாலைக் குடிதனிலே வளருந்தலைமையா
ய் வருநிருப, னகிலம்புகழ்ந்தேற்றும் பெரியோர்பத மகத்திலனுதின
மிருத்திநிதம், புகலுமொருசொல்வேள் செய்தக்காதுபுகழாரிக்கதை
பாடினனே. (௰௫)

தாதுகறுந்தூய வாசமுஞ்சேர் தவளைங்கமலத்தில்வீற்றிருக்கு,
மாதுமாசப்பூ மாலிகையும் வயங்குமணிமார்பன் மறையினெறி, யோ
துந்திருப்பாலைக் குடிதனில்வாழ் வுற்றோன்கோத்திரர்க்காதிதந்த, நீ
தனெனுஞ்செய்தக் காதிமன்ன னேமிதனிலிதைப் பாடினனே. (௰௬)

## காலம்

நன்றிதரும்வேத விளக்காகிய நபினூர்முகம்மது நபிமதினஞ்,
சென்றகிஜறத்தோ ராயிரத்துச் சின்னமொருநூற்று நாற்பத்தெட்டில்,
மன்றல்கமழ்நீணோரினம்பெருகி வளருந்திருப்பாலைக் குடிமன்றினில்,
வென்றிதரும்ஹஜ்ஜிப்பெருநாளன்று விளக்கமுடனரங்கேற்றினனே.

## தியாகமீந்தோர்

திரைசெய்கடல்சூழ்ந்த புவிமுழுதுஞ் செங்கோல்நடாத்திவேதி
னம்விளங்கும், அரசருமதின்ற அபூஷகமா ஆகந்தனையருந்தமிழினா
லே, புனைசெய்திடமனங் களிகூரவே யும்மவெகுமான வரிசைசெய்
தார், விரைசெய்மணிமார்பர் திருப்பாலைவாழ் வேதநெறிசேரு முகமீ
ம்களே. (௰௮)

தருவந்துலகினி லுதித்ததெனத் தழைக்குமதுனாயம் பதியாதி
பன், பெருகுந்தமிழாய்ந்த நாவலோர்தம் பிள்ளையெனவந்தோன்பெ
ரியோசைச்சொல், முருகுந்தியமார்பன் வாணக்கார முத்துமுகம்மது
தரும்பாலகன், திருவுந்தியுதோழன் செய்தக்காதிசிறப்பாய்ப் படித்த
ரங் கேற்றினனே. (௰௯)

## நூல்

அல்லாவருள்னூத ரிறசூலுல்லா வகிலமலைகட லமரர்பதி, யெல்லாமொருகுடை யினிலரசா யிருந்துசுவனமா நகர்போனபின், கல்லார்க்கறிவுரோ யெற்றிருந்த காவலபூபக்கர் காலமும்போய்ச், செல்லார்கொடைக்கரத் தும்முறுகத்தாப் சிங்காசனத்தினில் வீற்றிருந்தே. (௨௰)

மானும்புலியுமே யிணைக்கியொரு மடுவிற்புனலுண வும்வானுலாச், சேனங்கிளியுமே பொருந்தியொரு செழும்பஞ்சரத்தினிலிருந்திடவு, மீனமுறுங்காபிர் மகுடமுடி யிடறகடமிமெம்பகடுடையோர், ஆனென்றநன்கரத் துமறுகத்தா பரியநெறியினோ டரசாண்டனர். (௨௧)

கத்தாபருள்பால ரிந்தவிதங் கடற்பாருலகெல்லா மொருகுடையி, லுற்றாண்டிருக்குமந் நாளியிலே யொருமானரசர்முன் னுரைக்கலுற்றான், மற்றுசலப்புயத் தரசர்கட்டம் மன்னுமெனதுகை வழுவியொரு, சற்றாகிலுமென்னைத் தரியாமற் றரையிற்கவிழ்த்தேனென் றுரைத்தனனே. (௨௨)

என்னைத்தரையினிற் கவிழ்த்தேனென்ற விளமானுரைகேட்டெழுந்தருளி, மன்னைப்பதங்கொண்டு மிதித்திடவே மடைசாய்ந்தெனப்பூவில் வழிந்ததுகள், டென்னமிகவுள்ள மயிலனையா ளிருந்தகுடத்தினை லெடுத்திடவே, யண்ணலுனதுபாத் திரமொழிய வதிகமெடுக்காதே யெனநவின்றார். (௨௩)

அறைந்தமொழிமறு தவள்குடத்தி னைவின்படி யென்னைத்தனையெடுத்து, நிறைந்தமனத்துட னேகலுற்றாள் நீதியரசர்கோனுலகமீதி, லுறைந்தகுபிரொனு மிருளைநீக்கியொளிரும்பருதிபோற்றீனுண்டாக்கிச், சிறந்தபுகழுறந் தழைத்துவாழச் சிங்காசனத்திருந் தரசாண்டனர். (௨௪)

இந்தவிதநெறி நடத்திவரு மேந்தல்தவத்திலார் ஆண்மக்களில், மைந்தரொருவர்பேர் அப்துல்லாவாம் மற்றோர்பெயரபூ ஷகமாவென்போர், விந்தைநெறிபால ரிருபேர்களுந் மேலோனருளினாலுமறுகத்தாப், சிந்தைகளிகூர வளர்ந்தாரந்நாட் செய்திகளையினிச்செப்புவாமே.

வள்ளலெனுங்கொடை அபூஷகமா வரிசைமுகம்மது நபிக்கிறங்குந், தெள்ளுமறையெடுத் தோதும்போது ஜெகத்திற்பறவைகள் சிறையொடுக்கி, யுள்ளன்பொடுகேட்கும் விலங்கினங்க ளோடுமிசையினைக்கேட்டுநதி, வெள்ளந்தழுகிநின் றழகுமேவும் வேதக்குரலோசை கேட்டிடுமே. (௨௫)

நீதருமறவேந் தருள்பாலகர் நெறியும்வணக்கமு நிதமுமறை, யோதுந்தனத்திபும் நபியிறசூ லுல்லாகுணமிவர்க்குண்டாச்சென்றே,

வேதாவைப்போல ரசலுசைனும் விரும்பியவர்பேரில் மிகமகிழ்ச்சிய, போ தமூஹறப்பத்துங் கருணையுமாய்ப்புவியோர் புகழ்ந்தேற்ற விருந்துவா ழ்வார். (௨௭)

இளவல்திருவேத மெடுத்தோதினு விரங்காமனைதெல்லா மெரியி லுந்த, மெழுகொத்துருகியே குளிர்ந்துநீராய் பெருமாறதினாலேமேதி னியி, லுளபோடங்கலு மபூஷகமா வோதுந்நூாலோசைக்காசையாக விழுவார்மயல்பொறுக் கரிதாகவே வீந்தார்சிலரெனவிளம்பினரோ. ()

மையலதினாலே மாந்தரெல்லா மாய்ந்தாரெனுமாற்றந் தனையறிந் து,செய்யபுகழ்சேரு மலிப்புலியார் திருப்பாலகரச லுசைனிருக்கும், துய்யசபையிடந் தனிலிருந்து சுருதியிசைகூட்டிச் சொல்லாமலே, மெய்யின்பொருள்மேவுந் திருமறையை மெல்லவோதியங் கிருப்பா யென. (௨௯)

அருமைக்குமாருக்குரைத்துவேதத் தழகுந்தறுத்திபு மதபுமிக் க, தருமகுணமுநல் லறநெறியுஞ் சசிநேர்முகமதுந் தாரணியோர், பெருமைப்புகழ்ச்சிகொள் டவரையேத்திப் பேசுமுறையுங்கேட் டற ந்தழைக்கு, மருமைத்துரையான வுமறுகத்தா பகத்தின்மகிழ்ச்சியெ ய் திருந்தனரோ, (௩௰)

பிள்ளைதனைப்பெற்றோர் சான்றோரெனப் பேசுதல்பெற்றோர்தம கவெனவே, வள்ளல்துனியாவி லாசையெல்லா மகனாபூஷகமாபேரி லவ், கெள்ளலறவாழ்த்திப் போற்றிவள ரிருகண்மணியாமென் றினி தாகவே, கன்னுப்பொதிந்தகுங் குமப்புயத்தார்கல்புப் பழம்போலே வளர்த்தனரே. (௩௧)

இவ்வாறுமமேந்த லருமைமக னிருகண்மணியென் விருக்குநா ளிற், யவ்வமறுசூழ்ந்த புவியிடத்திற் பங்கத்தோர்சிரம் பொடிபடவீ சிய, வெவ்வாட்கரத்தினு ருரையமாறி விகடந்தவிராமல் வீரமோடு கல்லவயார்கைபர்ப் பதிதனிலே காபிரடங்காம லிருந்தனரோ, (௩௨)

அந்தப்பதிக்கேகிக் காபிர்களை யறுத்துநெறிமார்க்க மருள்வோ மென்னக், சிந்தைக்கிளங்குநேர் மறையுதுமான் சிங்கப்புலியலி அச லுசைனர், சந்தப்புயத்தினரசுகாபிமார் தளமாம்பதின்மூன்று சதுநெ ருங்க, விந்தைப்பொருவில்லா ருமறுகத்தா பேகனருளோடக் கெ ழுந்தனரோ, (௩௩)

கயங்கொண்டிவுளி கொண்டிரதமுடன் காலாட்படைகொண்டுங் கருதலார்கள், பயங்கொண்டணிகெட்டு முறிந்தோடியேபறக்கப்பொ ருதிந்தப் பார்முழுதுஞ், ஜெயங்கொண்டிடும் வேந்தருமறுகத்தாப் சேனையுடனெழுந் தருளும்வேளை, வயங்கொண்டிடுமிள வேங்கையொ த்த வள்ளலபூஷகமாவுரைப்பார், (௩௪)

ஜபாவெனைப்பெற்ற திருத்தாதையே அருமதுமருள்தம் மாதுலை
ரோ, கைபார்கைபறுக் குபிரோர்படை காணவருவேனு னெனக்கவலத்,
துய்யோரருள்பெற்ற வுமறுகத்தாப் சொல்வார்கெடுந்தூரத் தொலைக்
டந்து, மையார்குபிரோர்கள் பதிக்கேகுதல் வருத்தமலாவேண்டா மெ
னத்தடுத்தார், (௩௰௫)

கூறுமொழிதெரிந்தபூஷகமர்குறுகார் பணிபாதக்குலவேந்தரே
மாறுபகர்காபிர் பிசமிற்குமன் துமிகலாசையானேனெனப், பேறுபெற்
றம்பால ருரைத்திடவே பெருமானகமகிழ்ந் தமரின்மனர், தேறும்புத
ல்வரைக் கூடக்கூட்டிச் சென்றார்பெருஞ்சேனை செறிந்திடவே, (௩௰௬)

வெல்லும்படைமன்னர் சூழ்ந்துவர வெம்பிசுங்கரத்தயில் வேலெ
டுக்க, வெல்லுமறைந்திடத் துகளினுமேல விடக்கியம்பதத்தூளிதுடை
த்தேகவே, கல்லுஞ்சிறுநெறி மலர்ப்பொழிலுங் கரடுங்கழனியுங் கட
ந்துதொலை, செல்லும்படைவீரர் கைபறெனும் தேயந்தனைச்சென்று
வளைந்தனரே, (௩௰௭)

வளைந்தார்மதினத்துப் படையெனவே மதிளோங்கியகைபர்ககரி
னுள்ளோர, ரெழுந்தார்கடல்போல வுமறுபடைக் கெதிருற்றமோட வி
கலரசர், தொழுந்தாளலிகர வாள்வீசியே துண்டமிரண்டாகத் துணி
க்கப்பாரில், விழுந்தார் மறுக்கரலெண் ணரிதாம்படைவெள்ளமென
வந்து சூழ்ந்ததுவே. (௩௰௮)

கலியரமெனப்பொருங் கருதலார்முன் கத்தர்பருள்பாலர் கரங்
காட்டியே, அலியாரசனுடைசன் சகுபிமார்க ளனைபேரையும்விடுத் தம
ர்விளைப்பப், புலிவாய்தனிலகப் படுமருணன் போலேதுகள் பட்டுப்
போர்களம்மாற், பலியாதெனவளைந் தெதிர்த்தகாபிர் படைகள்தெறித்
தோடிப் பறந்ததுவே, (௩௰௯)

வெட்டும்படையெல்லா முறிந்தோடவே வேந்தர்பெருமானும்
பெரும்படையுஞ், சட்டமுடனந்தப் புரிசைபுக்குச் சத்தியான்குபிர்
தனைமுருக்கித், திட்டமுறும்வேதக் கலிமாவுரைதிருத்திப் பொருந்தா
ரைத் தீனிலாக்கி, யட்டதிசைவேந்தர் புகழ்ந்தேற்றவே யரசருமவ்வம
ங் கினிதிருந்தார், (௪௰)

சேரார்பதிவச மானசெய்தி சிறக்குமதினத்தாரவர்க்குரைக்க, ஆ
ராகிலுமுன்னேடா வெனப்புவியாளரசர்தமக்கவ்வளவுறைந்திடவே, தா
ரார்திருப்புய அபூஷகமா தாதைகமலத்தாள் தனைப்பணிந்து, சீரார்
பதியெனு மதீனநகர் செல்வேனுனென வுரைப்பதானார், (௪௧)

கனதிபெறும்பால ருரைத்தபோது கத்தாபருள்வேந்தர்மகனை
நோக்கி, யெனதுகுடிக்கெல்லாமருமருந்தே யிருகண்மணியே நாமெல்

லோர்களுந், தினமிங்கொருபத்து நாட்கழித்துச் செல்வேமென்ச் சொல்லத்தினவர்கள், தனதுமனக்குளிர் அபூஷகமா தகப்பனா ருடன் சாற்றலுற்ருர், (௪௨)

அன்னைதிருமுகங் காணுமல்நா ளுஞ்சமிகவாடேன் னவளைப்பார்க்க, வென்னையனுப்புமென் றபூஷகமா விளம்பவிடைகொடுத் திளவலுடன், மின்னையனையவேற் கரத்திலேந்தும் வீராட்டபரியைஞ்ஞா ருடனேவிடப், புன்னைமலர்ச்சோலை நிறைந்தகைபர்ப் புரிசைகடந்தய லேகினரோ. (௪௩)

கூடும்மரிவேந்தர் சூழ்ந்துவரக் குளிர்ந்தவசனவா யபூஷகமா
கார்வேங்கழனியு மலர்ப்பொழிலுங் காடிகரிபுல்வாய் கவரிதிரி
கோடுந்திடர்களுநறைத்தாமரைக் குளமுஞ்சிறுவாடிக்குடிகள்சூழ்ந்த
நாடுநகரமும் பலகடந்து நடந்தார்மதினமா நகரைநோக்கி. (௪௪)

கொண்டல்செறிதோப்பிற் கோகிலங்கள் கூவுமதீனத்துக் கோர்காதத்திற், சென்றங்கொருபூங்கா வனந்தனிலே ஜெயக்கொளரியேறென் றினிதிறங்கி, யண்டர்தருவெனும் பாலகனை யணிகொளணிகளாலலங்கரித்துக், கல்மேறுமன்னர் செடிகலங்கக் காவுங்கடந்தயலேகலுற்ருர். (௪௫)

மதினந்தனைத்தேடி வரும்வழியில் வடிவாரபூஷக மாவுடலில்
விதனமிகவுள்ள சுரந்தொடுத்து மேனியடங்கலும் வெதுப்புறவே
யிதெனகடுங்காய்ச்ச லெனப்பதறி யிளகும்பரிவீர ரிரங்கியேத்திப்
பதனமுடன்கூட்டி நடந்துசென்று பதியாமதினத்தி லடைந்தனரோ.()

மணங்கொள்மலர்ப்பதத் தபூஷகமா மதினந்தனில்வந்து மருவலர்கள், பிணங்கும்பெருங்கோட்டை தனதாக்கிய பெற்றியனவர்க்குமிபம்பியுமி, ரிணங்கனவந்தோ ரவரவர்தன் னில்லம்புகுதுமென் றேவிமல, ரணங்கென்றுலகெல்லாம் புகழோங்கிய வன்னைதிருமாடம் புகுந்தனரோ. (௪௭)

அன்புதரும்பால ரபூஷகமா வகத்திற்புகுந்தின்ற வன்னையார்க்கண், இன்பமுடன்சலாங் கூறியபோ திளகும்விழிபெற்ருளெனமகிழ்ந்து, தம்பமுடன்மறு மொழியுரைத்துத் தனதுமகனைத் தழுவவங்கு, வெம்புங்கடுக்காய்ச்ச லிருக்கக்கண்டு மெய்சோர்ந்துருகின் றழுதனரோ. (௪௮)

அவ்வளவுமதீன்ற பாலகர்தம் மருமைத்திருமேனி யலைஞ்சுரத்தால், வல்லமையிலான புலகமாதா வருந்தியழுமந்த வாறறிந்து, நல்லமதினமா நகரிலுள்ளோர் நாயனருட்சேரு முமறுகத்தாப், கல்லணிவ்மணியான மகன்மேனியின் காய்ச்சல்தனைப்பார்த்தே கவலையுற்ருர்.

திருத்துமறையோது மபூஷகமா திருமேனியிலுற்ற ஜீச்சுரத்தி
ன், வருத்தந்தனைப்பார்த்த ஜனங்களெல்லா மலர்ந்தமுகம்வாடி மதிம
யங்கித், தருத்தங்கியகரத் தரசருடன் சாற்றென்றொருதூதன் றனைவி
டுத்தார், கருத்தின்றவரோகி யுமறியுனு கத்தாப்திருமுன்னே கழறி
னரே. (௨௰)

சொன்னமொழிகேட்டு நபிபிறகுல் தோழர்பெருங்கோட்டைசூ
ழ்ந்தகைய, றென்னும்பதிக்கொரு தனையிலக்கா யிருத்திப்படையுட
னிலிதாகவே, கன்னல்வளநாடு மலர்ப்பொழிலுங் கடந்துமதினமாந
கரில்வந்து, மின்னுஞ்சுதைதெளித் துயர்ந்தழகு விளங்குமணிமாட
ம் புகுந்தனரே. (௨௧)

மாடந்தனிற்புகுந் தபூஷகமர் வருத்தந்தனைப்பார்த்தென் மணி
டிகனே, தேடுந்திரவியப் பொருளேயென்றன் சிந்தைதப்பழமேயான்
செயுந்தவமே, யாடவிடுஞ்சுர மிதுவேதென்ன வழருதருப்பால ரரு
ளிச்செய்வார், நாடும்புகழாதி யொருவனேவும் நன்மையால்வந்த தெ
னநவின்றார். (௨௨)

மைந்தரிதுகூற மனதுமிக மயங்கித்துபராறு ரிதையநிந்து
விந்தைசெறிமாலைப் புயத்துதுமான் வீரப்புலியவி யார்களெல்லாஞ்
சிந்தைதெனவெழுந் துமறுகத்தாப் திருமாளிகைபுகுந் தபூஷகமா
கந்தமலர்மேனிக் காய்ச்சல்தனைக் கண்டுமனங்கரைந் துரைக்கலுற்றார்.

அறிவும்பொறுமையும் வேதவோசை பழகுந்தறுத்தீபும அதபு
ம்நல்ல, நெறியுமுகம்மது நபிதமைப்போல் நின்றார்தமக்கிது நேரு
மோவென், றெறியுங்கடலாமென் றவர்களாதி யில்லந்தனிற்புகுந் தவ
னிடத்தும், செறியும்பலபல தோத்திரமாய்ச் சிறக்கும்படிதுவாச் செ
ய்தனரே. (௨௪)

அமுதத்தருஞ்சொல்லா ரபூஷகமா வல்லேயிடத்தில்வந் தருட்
பெருகுஞ், சிமுதக்குடையாளர் நபியிறசூல் தேவியுலகீன்ற திருவனை
யார், குமுதப்பதத்தினு ரும்மறுடனே கூறும்மிதுசுரங் குணமாகவென்,
றெமதுட்கருத்தென மரசதேவிக் கினியதொருமாற்ற மிசைப்பதா
னார். (௨௫)

எனதுதிருப்பேர ரசனுர்தமக் கிதுபோலொருசுர மெடுத்ததனுல்
மனதுசலியாம லொருநிய்யத்து வைத்தாரலிப்புலி வறுமையோர்கள்
தனதுபசிதீர நூறுபேர்க்குத் தானமும்மோனந் தான்கொடுத்து
வினவுமொருமூன்று பேருரிமை விட்டார்சுரம்விட்டு விலகியதே. ()

சாற்றுமொழிகேட்டபூஷகமா தாயாருமறுட னுரைத்திடவே
நேத்தியுடனந்தப் படியவரும் நேர்ந்தபொழுதினில்நெடியோன்மறை

யேத்துமகன்திரு மேனிதனி லிருந்தபிணியெல்லாம் பறந்திடவே
பூத்தநகைச்செந்தா மரையதுபோற் புளகமுற்மனம் பூத்ததுவே. ()

திருவார்க்கரசெனு முமறுகத்தாய் மகனூர்பிணி தீரமனமகிழ்ந்து, குருவாமுகம்மது நபிதேவியார் கூறும்படிநேர்ந்த கட்டுங்கொடுத்துத், திருவாருதியெனு மசுகாபிமார் சிந்தைகளிகூர்ந்து தினமும்போற்றக், கருமாமுகிலெனுங் கொடைக்கரத்தார் கருணையுடனினி திருந்தாரிப்யால். (௫௮)

மதினாநகருள்ள ஜனங்களெல்லா மனதுமகிழ்ச்சிகொள்ள பெருந்துநாவி, மதநாறியபுயத் துமறுகத்தாப் மலர்த்தாடனைப்பணிந் திதுணைப்பார், பதினெண்குலகமும் புகழோங்கவே பாராளரசர்க்கே சரியேயுங்கள், சுதனாபூஷக மாவோநய கருதியிசைகேளா திருந்ததனால். (௫௯)

மனங்கள்சிலையானே மிரக்கமற்றே மரமேதரித்தனம் மன்னெஞ்சானோம், தினங்கடொறுமாசை யுமதுதிருச் சேயின்மறையினை செவிபுகாமம், நனங்களசிதான வறிஞோர்நெஞ்சந் தனைப்போலிடைந்துள்ளந் தடுமாறினோந், சினங்கொளயில்வேலீ ருமதுதிருச் செல்வர்தமையோதச் செப்புமென்றார். (௬௰)

தருப்போலருள்வேந்த ருமறுகத்தாப் தரும்பாலகரோதுஞ் சாரத்தினால், விருப்பாய்மனதுகொண் டறியவேதம் விளம்புமெனக்கூற வெஞ்சுரத்தால், மருப்பாய்மலர்மேனி மெலிந்திருக்கு மாற்றமதனாலே மனதிரங்கி, யிருப்பார்புகழ்சேரு மதினாவுள்ளோ ரெந்தல்திருமுன்னீ தியம்பினரே. (௬௧)

உத்தஜனங்கூறும் வார்த்தைகேட்ட வுடனேமகனூர்மேலுறுஞ்சுரத்தால்,மெத்தமெலிவான வாறுகண்டு விளங்கும்புறக்காலை விளம்புமென்னச், சித்தமிரங்கினின் றாரோர்சொல்லுஞ் செய்திதனைக்கூமத் திருவேதகத்திற், குற்றமனுகாதார் மனமகிழ்ச்சி கொண்டேசித்தெடுத் தோதலுற்றார். (௬௨)

செம்பொன்னகராளு நபியிறசூல் திருவாய்மொழிபோலேசிறிது நேரம், அம்பர்மணம்வீசும் பாலகனூ ரமுதகுரானெடுத் தருளியபின், வெம்புஞ்சுரத்தாலென் னுகமெல்லா மெலிந்தபடியாலேவிரித்தோததல், வம்புமிகவாச்சே நாளையானால் மனதுகளிகூரமவல்லவனென்றார்.

நாளையெனும்வார்த்தை தலைமேற்கொண்டு நடந்தாரவரவர்மனையிடத்தில், காளையார்மனை தனிற்புகுதக் கதிரோனடைந்துபின்னுதயமான,வேளைமதினமாநகரமதில் விளங்குமிருவணைக்ச் சனங்களெல்லா, மாளைமதின்வழித் திரகூழல்லாவைகும்நவுலாவின் வந்துசூழ்ந்தார்.

வந்தாருதுமானும் அபியுல்லாவு மற்றோரடங்கலும் வந்தாரென
ச்,செந்தாமரைமுகத் தரசர்கோமான் செல்வர்தனையழைத் தினிதினோ
தி, மின்றாரணிப்புயத் திறகூதுல்லா விளங்கும்றவுலாவி லிருந்தபின்
னர், முந்தாரணமெடுத் தோதுமென்ன மொழிந்தார்மதினமா நகருள்
ளோரே. (௬௫)

உள்ளாதரவுட னோதுமென்ன வுரைத்தபொழுதினி லுவகைகூர்
ந்து, தெள்ளார்புறுக்கானை நபியிறசூல் திருவாய்மொழியாமென்றெடு
த்தோதினர், கள்ளார்மரவமா லிகைப்புயத்தார் கபிபுநபிதோழ மா
ரெல்லோருங், கொள்ளாமகிழ்ச்சிகொண் டிதயமெல்லாங் குளிர்ந்த
ங்கொருமாற்றங் கூறலுற்றார். (௬௬)

முன்னுளிறைதூதர்ரசூலநபி முறையாலருளிய மறையவர்க்குப்,பி
ன்னுளவரைப்போ லெவராகிலும் பிரிசமுடன்கூறக் கேட்டதில்லை, யி
ந்நாளிவரோதக் கேட்டோமெங்க ளிதயங்குளிர்ந்தோமென் றேத்தமா
கச், சொன்னாரவர்மனம் பெருமைதோற்றத் தூய்யோன்திருவுளக் கு
ளிரையுற்றதே. (௬௭)

அவ்வேளையிற்பால ரபூஷக்கமா வரசர்பெருமான்றன் னடிபணித்
து, செவ்வான்மதியான மதினநகர்த் தெருவில்விளையாடி வருவேளை
லை, வெவ்வாளரசரும் விடைகொடுத்தார் விரைந்துநடந்தொரு வீதி
சென்று, வெவ்வாக்கொடியவ னெனும்ளகுதி யுறையுந்தலைவாசலடு
த்தனரே. (௬௮)

இளவல்தனைக்கண்டே வாயல்நின்ற எகுதியவர்தாவி விரைந்துசி
மனக்,களவுதனைநினைந் தறிஞர்தமைக்கபாடந் தனக்குள்ளேவரவழை
த்து, மழலைவயதிலே யுடலமெல்லாம்வாடி மெலிவதென் வருத்தமு
ன்டோ, பழமைதரும்வேதக் கடலனையீர்பகரு மெனப்போற்றிப் பக
ர்ந்தனனே. (௬௯)

பேச்சிலினிதான வாசகத்தாற் பிறைவந்துறுமென்ப தறியாம
மே, காய்ச்சலதனாலே யெனதுதிருக் காயமெலிந்தே னென்றுரைத்த
ளவில், கீச்சுகிலேயில்லாக் கனலெரியு நிரையந்தனில்விழுநினைவின்யா?,
வாய்ச்சதெனமகிழ்ந் தறிவிழந்த வம்பனொருமொழி மவுல்வதானுன்.

மங்குஞ்சுரந்தனக்கெனதிடத்தில் மருந்துண்டதைவாங்கி யருந்
தினீரேற், பொங்குமுடல்நின்ற சுரங்களெல்லாம்போகும் பல்பலபி
ணிகளும்போம், அங்கமடங்கலுங்குளிர்ந் தொளிருமழகுஞ்செறித
ருமதிகமாற்றுத், தங்கமெனத்தேகம்பளபளெனத் தழைக் குமிளமை
யுந் தளர்ந்திடாதே. (௭௧)

மருந்தின்பலமிதென் றுணைகூற வடிவாரபூஷக மாமடியீ, லிரு
ந்தமுடிப்பினில், வெளிக்காசை யெடுத்துமருந்துதாவெனக்கொடுக்க
ப், பருந்தோன்றியவேற்கை யுமறுகத்தா பாலரிடத்தினிற் கூலிவாங்
கப், பொருந்திவதுமெனக் கியல்போவென்னப் போற்றிமறுத்துரை
புகலலுற்றான். (எஉ)

ஆதியுலகெல்லாம் படைத்தாள்கிற வருளைப்பொருளானே" யுமதனவி, லேதுமொருகாசு வரங்கமாட்டே னில்லந்தனில்வாரு மென
வெழுந்து, சாதித்தலைவனு சபூஷகமா தன்னைக்கொடுசென்று தகுத்
திலவைத்துத், தீதிலுருக்கொண்டோன் அறையதனைத் திறந்தக்கொ
ருபீங்கா னெடுத்துவந்தான். (எ௩)

எடுத்துவரும்பீங்கான் நனைத்திறந்தங்கிருந்த மதுபானமளவிற்
கையிற், கொடுத்துப்பருகுமென்றவனுமாக்கக்குடித்தா ருடலெல்லா
ந் துடித்துமுகம், கடுத்துந்தலைகிறு கிறுத்தெனக்குக் கள்ளோகொடு
த்ததெனக் கவலெனவே, தடுத்துப்புகல்வானீ துமதுநோய்க்குத் தருமாம
ருந்தெனச் சாற்றினனே. (எச)

மாகம்புவியொன்றாய்க் கிறுகிறுத்து மயக்கந்தனைக்கொண்டு மதி
மயங்கி, யாகந்தடுமாறி வருவதெல்லா மாக்கின்வெறியாமென்றவரரு
ள, ஏகனருட்சேரு முமதுகத்தா பிருகண்மணியான விளவரசே, வே
கமருந்துள்ளது மயக்கமல்லால் வேறொன்றிலையென விளம்பினனே. ( )

அவ்விடுகற்றேற்ற வரும்பாலகன் அப்போதெழுந்திருந்த வி
டம்விட்டுக், கவலையுடன்வீதி தனிலேகிய காலோவிபுலீசு கலைத்துட
னே, புவனந்தனிலுள்ள அசுகாபிமார் போலேதிரண்டவர் போம்வழி
யில், மவுலமுடனிற்கத் தெரிந்தறிவின் வடிவாய்த்தடுமாறி மயக்கமு
ற்றார். (எசு)

மதுவுண்டதிவழிற் றுடல்பதறி மயக்கத்துடன் வாரோர்மறைநெ
றியோர்க், கெதிர்சென்றிடப்போகா தெனநாணக் கொண்டேகுந்தெ
ருமறுத் தொருதெருவில், விதவென்றழகுறும் அபூஷகமாவினைந்,
துநடந்திடும் வீதியெல்லாஞ், சதிகொண்டிபுலீசு நபிதோழன்மார் த
மைப்போலவர்கண்களிற் றோற்றினனே. (எஎ)

தேனுந்தியதாமப் புயத்துமறு செல்வர்நடந்தேகுந் தெருக்களெ
ல்லாம், ஈனம்விளைத்திடுங் கொடியோன்பொல்லா இபுலீசெனுமாய
னெதிர்வளைந்து, தானந்தருநபி தோழன்மார்கள் தம்மைப்போற்பகல்
நான்குசாமம், மானும்புவியும்போற்றொடர்ந்திடவே மதிசோர்ந்தொ
ருபூங்கா வனத்திலானார். (எஅ)

தோப்புத்தனிற்புகுந்திருக்கும்போதுதோசியிபுலீசுதொடர்ந்து சென்று, காப்புதனைக்கொப்பாப் பணிகள்போலே க ளோதனைச்சுற்றிக் காடமெல்லாந், தீப்பற்றிடுமோப்போற் சீறிச்சீறித் திண்டப்பயங்கரந் திரளாய்வெகு, கோப்புத்தனைக்கண்டே திரும்பியந்தக் கொடியோன் றலைவாயம் குறுகினரே. (௭௯)

கொடியபெரும்பாவி மணிவாயலைக் குறுகிவரும்போது குட்டி சைசி, நெடியகதிர்புகுந் தெருதியுட நெஞ்சமெனநிசி நேமியெல்லாம், படியமனமகிழ்ந் தவனளித்த பசும்பொற்கொடியெனும் பாவைநல்லாள், கடிகொள்மலர்மாது தனைநிகர்த்த கன்னிதனையலங் கரிக்கலுற்றான். (௮௰)

கொண்டைமலர்சூட்டி மதிநுதலெற் குளிர்ந்தமனமாகக் கோலமிட்டுக், கெண்டைவிழியின்மை யெழுதிக்காதிற் கிரணமதிக்கொப்பு வாளியிட்டுக், கண்டைநிகர்மொழி மடமாதுட கழுத்திலணியுமா பரணமிட்டுச், செல்லைமறவாத குமுதமலர்ச் செங்கைதனில்வளை திருத்தினனே. (௮௧)

பொன்னின் குடந்தன்னைக் கனகமேனைப் பொருவுமிளமுலைதனிற்புதிய, வன்னமணிக்கச்சுதரித்தொளிரு மதியமெனுமார வடங்கள்பூட்டி, மின்னுவண்ணிடையினிற் சரிகைச்சேலை விசித்துக்கணையாழி விரலிலிட்டே, அன்னநடைமின்னாள் பதந்தனிலே யழகுதருந்தண்டை சிலம்பணிந்தான். (௮௨)

அரியபணிகொள்ளா பரணமெல்லா மழகுமயில்தனக் கணிந்ததன்பின், விரியுங்கதிர்மாடந் தனையழகாய் விதானமுடன்கோல விளக்கஞ்செய்தே, யெரியுங்கதிர்மணித் தீபமேற்றி யினியமதுமலரணைவிரித்துக், கரியகுழல்மாதை நடத்தியந்தக் கனகமணிமாடத் திருத்திவைத்தான். (௮௩)

வன்னெஞ்செகுநிதன் மகனையவன் மாடந்தனில்வைத்து மறையகின்றான், அன்னமெனுநடைக் குயில்மொழியா ளங்கந்தனிற்படித்துறங்குநேர, மன்னர்தம்பாலர் வெறியினாலே மதிபோலொளிர்ந்த மனைபுகுந்து, பொன்னினிறத்தினாள் படுத்திருந்த பூம்பஞ்சணைமீதிலிருந்தனரே. (௮௪)

வன்னமலரணைதனிலிருந்து மாதுமலர்மேனிதனைத்தொடவே, கன்னல்மொழியினாள் விழித்தவனைக் கண்டாளெழுந்திருந் தொதுங்கிநின்றாள், அந்நபொழுதவ ரெனக்குடந்தை யாகவருவாயென் றழைக்குநேரம், என்னமொழிந்திதென் றுதைமன மிணங்காதகலுமென் றியப்பினளே. (௮௫)

மாடப்புறத்தினிலிருந்தொளித்த மாற்றமறிந்தென்றன் மணிமகளே, யாடம்பரிவேந்தருமறுகத்தா யருண்மைமகளைப்போலியாரொருவர், தேடக்கிடையாதுன் மனதுக்கேற்ற சிங்காரமானஜீனத்துள்ளார், கூடப்புதுமலரணைமீதவர் குணத்தின்படிகூடுகெனக்கூறினன். (௮௬)

தசப்பணியாய மானசெயற் றனக்குப்பொருந்தின் றுரைத்த மாற்றம், ஜெகப்பெண்டனிலும்பே ரழகுயர்ந்ததெரிவையுமக்கேட்டுத் திடுக்கமுற்றே, யகப்பண்புடனிந்த வுலகமீதி லரசர்மறைதேரு மறிவுடையோ, ருகப்புங்கருணையுந் தரித்தபாலர்க் குற்றதொருவார்த்தை யுரைப்பதானுள். (௮௭)

பதுமத்திருமேவுந் தொடைப்புயனே பாராளரசின்ற பாலகனே, மதமுற்றறிவில்லாக்கொடியவர்போல் மாறுபடுஞ்சனு வார்த்தைசொன்னீர், இதமுற்றரசாளு முமதுதந்தை யிதனையறிந்திடிற்சீர்வாளினு, லுதிரத்தசைவேறே யுடலம்வேறே யுனையுமெனையுமே வதைத்திடுவார். (௮௮)

எந்தைசதிகார னுமக்குப்பெர்ல்லாங் கிட்டுவருத்தவென்றெனைவிடுத்தா, னுந்தன்மனதினி லறிந்துபயந் தொழுகிடப்பிறொன்றோடைமலர், விந்தையுரைத்தசொற் செவிபுகாமல் வெறியின்குணமதமிகுத்ததனும், சிந்தைமயல்பெருத் தவளுடனே செழும்பஞ்சணைமீதிற் சேர்ந்தனனோ. (௮௯)

காந்திமதிபோன்ற வதனமது கலசநிகர்போன்ற கனதனத்திற், சேர்ந்தமயக்குமு மதுமயக்குந் திரண்டங்கவர்திரு மேனியெல்லாஞ், சோர்ந்துமலர்ப்பாயி லிருபேருமாய் சுபுகுவருமட்டுந் துயில்புரிந்தார், ஆய்ந்தமறைப்பள்ளி தனிலேயிலா வழகுதரும்வாங்கு கூறினரே. ()

வாங்குமொழிந்திடுந் தொனிசெவியில் வந்துபுகுதவே விழித்தெழுந்து, தேங்குந்திரிகையின் மதுவெறியுந் தீர்ந்துமனப்பீடை திராமலே, யேங்கியறிவழிந் துடல்வாடினா மெங்கேயிருக்கிறோ மிவளாரென்னச், சோங்குகடல்மீதி லுடைந்தோரென்னச் சொல்லத்தொலையாத துயராகினர். (௯௧)

சித்தங்கலங்கியே வயமகனுஞ் சிங்கந்தனைப்பார்த்துத் தேன்மொழியா, ளுற்றங்கருணவா ளிரவதெல்லா முதாசன்றனைப்போல்வீண் விளைத்துமகா, சுத்தம்பறைகின்றீ ரெனமொழியத் தோன்றலபூஷகமாவுரைப்பார், மைத்தங்கியவிழி மயிலேயென்னால் வருத்தும்பிழையேது மவுல்வாயென்றார். (௯௨)

சொல்லுமொழிவேந்த ருமறுக்கத்தாப் சுதனரபூஷகமாகேட்கவே, யல்லும்பயலையு மிதழியும்பே ராழிக்கடலையு மளிதனையும், வெல்லுஞ்

கருங்குழல் மாதுநல்லாள் விரகமதமீறி வெறியினாலே, கல்லும்பொருவாதென் முலைதழுவிக் கலந்தீர்பெரும்பாவம் விளைத்தீரென்றாள். ()

செய்யாக்கருமமீர் செய்தீரென்னச் சிந்தைதடுமாறித் தியங்கிமலர்க், கையால்முகத்தினி லறைந்தறைந்து கண்ணீர்கலுழவே கதறியழு, தையோவெனக்குள் தவறுமென்ற னறிவுங்குடிபோச்சே ஆயிழையே, மெய்யோவெனக்கேட்க மறுத்துமவன் விளம்பமதிசோர்ந்து விழுந்தனரே. (௬௪)

சோர்ந்துவிழுந்தாவி யிழந்தவர்போற் றுடித்துப்பதையாமற் கிடந்ததுகண், டேந்துமுலையினாள் மனம்பதறி யிருந்தநறும்பன்னீர் தெளித்துமலர், வேய்ந்தவிசிறிகொண் டாற்றும்போது மேனிவியர் தீர்ந்து விழித்தெழுந்து, வார்ந்தகுழல்மாதே யான்விளைத்த வடுவுள்ளதுதானோ வெனவகுத்தார். (௬௫)

மறுத்துமவளந்தப் படியுரைக்க வடிவார்வயிற்றினி லறைந்துகிறங், கறுத்துப்பனிரண்டு தரம்விழுந்து காயம்படநலக்கண் டாயிழையாள், பொறுத்துமுடிவேந்தர் மகனேவீணிற் புழுங்கியுமதாவி போய்விடாமல், நிறுத்துமிரகசியந் தனைமறைப்பே னிகழ்த்தேனொருவர்க்கு மெனவுரைத்தாள். (௬௬)

ஆலமடங்கலும் படைத்தவல்லோ னறியாதறிபவ னடியவர்கள், சீலமுறுமனத் துடிப்புமெந்தச் செயலுமறிபவன் மறைப்பதன்றி, ஞாலந்தனிலிதை நாமறைத்தால் நானோகியாமமென் றுரைக்கும்போது, கோலங்கெடப்பங்கப் படுத்திகத்துக் கொள்வாயெனப்பின்னுங் கூறலுற்றார். (௬௭)

ஆணாய்ப்பிறந்தவ னாகிலுமா மரிவையெனிலுமா மதமேமிஞ்சிப், பேணாக்கொடுஞ்சனைச் செய்தாரெனிற் பிந்தாதெழுந்தோடிப் பிடித்துடனே, கோணாதவரைநா றடியடிக்கக் குறானிற்றிருவுள மாறானின்னம், நாணாதவர்ஹலா லிருக்கச்செய்தால் நாட்டிச்சிலையெறி யெனநவின்றான். (௬௮)

இதனையறிந்துகொண் டுடன்பாடியா யிருந்தால்விலகாம லிருந்தோரையும், விதனம்பெருகவே வருமகுசர் வெளியிஸ்ராகத்துக் கசையினாலே, பதனமறவடித் திடுவேனெனப் படைத்தோன் குறானிலே யிறக்கிவைத்தான், மதனமயிலேநாம் பெரும்பிழையை மறைத்தால் மறையுமோ வென்மொழிந்தார். (௬௯)

ஆனாலொருவர்தன் ரகசியத்தை யடக்கிமறைத்திட்டால் ஆண்டவனும், வீநாறியசொர்க்கப்பதியுமவர் வேண்டும்விரிசையுமிகக்கொடுப்

பான், தேனேபிரவிஸ்நா லுன்திடத்திற் செய்தபிழைமறைத் திவோ
யென்றார், மாறுவிறைமயாணை வெளிவிடாமல் மறைப்பேன்மனப்பிணை
மாவுமென்றான். (ா)

இறைவனிதுவறிந் தமரோர்களே யெனதுகிருபைசே ருமறுகத்
தாப், சிறுவன்மறுவுண்டு வெறியினாலே தீனுவருத்திடுஞ் செயல்கள்
செய்து, மறையின்படிகத்துக் கொடுத்திடாமல் மறைத்துப்பதுக்கினு
ர் மாநிலத்தோ, ரசையும்பலீஹத்திலாக்கிருக்கும் அடிக்கும்வருத்தம்
பார்த் திருங்களென்றான். (ாக)

அந்தபஜர்னோ மபூஷக்மர் வறல்கொண்டேல்மூழ்கி யாதிதனைச்,
சிந்தையிணக்கமாய் வணங்கியந்தத் தெரிவைக்கினிதுணைத் தெழுந்து
நல்ல, விந்தைப்பணிகொல்டே யமைத்ததிரு வீடுதனில்வந்து விளை
ந்தமாற்றந், தந்தைக்குரையாமல் அரியநாயன் றன்னைப்புகழ்ந்துகொ
ண் டிருந்தாரிப்பால். (ாஉ)

தோகைமயிலன்னாள் வயிற்றறைக்குட் டுன்பங்கொடுவருஞ்சுலு
ண்டாகத், தேகமடங்கலும்பளபளப்புச் செறியத்தனமோடித்திரண்டு
விம்மக், கோகனகமேனிக்குறிகளெல்லாங்குழவிக்குலமென்பதறியா
மலே, பாகுமொழிமாதுதரித்தகெர்ப்பம்பத்துமாதமுமிறைந்தனவே

திங்களொருபத்து மூடிந்ததம்பின் றேனைப்பொருமொழித்தெரி
வைநல்லாள், தன்நந்தனையுருச் சமைத்ததுபோற் றனேயொருபாலன்
றன்னையின்று, பங்கமிதுவரு மென்றாரினிம் பாகமொருவர்க்கும் பக
ராமலே, கொங்கையமுதூட்டி மூன்றுமாதங் கோலமனைக்குள்ளே வ
ளர்த்தனளே. (ாச)

மாதமொருமூன்றி லவள்தகப்பன் மவுல்வான்மகளேயுன் மாற்ற
மதைப், பேதமறவாரு மதினாநகர்ப் பெரியோரிடத்தினிற் பேசியுன்ற
ன், காதல்மகனையு மவர்கள்முன்னே காண்பித்தெனதுகப் பழித்தாமெ
ன்றே, யோதுகெனக்கூற மனதுநாணி யுரையேதொருவர்க்கு மெனவு
ரைத்தாள். (ாரு)

சொல்லேனொருவர்க்கு மெனமொழிந்த தோகைக்குணவியான்
றாகபீயரன், பொல்லான்யான்சொன்ன வார்த்தைகேட்டுப் பொருந்தா
தவளென்றன் விழிக்கெதிரோ, நில்லாதெழுந்தோடிப் போடியென நீதி
தவறியே நிகழ்த்தினதாற், கல்லாதவர்மனம் போலிதயங் கலங்கித்திய
ங்கியே கரைந்தழுதாள். (ாசு)

அழுதுபுதல்வனைக் கரத்திலெடுத் தன்னமெனநடந் தாசர்கரம்,
தொழுதுபணிந்தேத்து முமறுகத்தாப் தோழரனைவோருஞ் சூழ்ந்து

னின்று, பழுவிகொன்றனுகாதானேவுகின்ற பஜிறுவிகொழுதுவந் திருக்கு ரோ, முழுதுமதிபோன்ற மகனையவர்முன்வைத்திறைஞ்சியே மொழி யலுற்றாள். (௱௭)

மக்கடபியுல்லர்தமக்கிறங்கும் வரின்சநெறிமார்க்கம்வழுவாமலே, திக்குத்திசையெல்லா மொருகுடையிற் செங்கோல்செலுத்திவாழ் இந்லரசே, சக்கென்றிறசூல்தந் தீனமாறும் தாதைதவிழவீகந்தானுவே யென், பக்கமொருமாற்றங் கேட்பீரென்னப் பாலைபுகழ்ந்தேற்றிப் பகாலுற்றாள். (௱௮)

சுந்தமண்ணிமார்பரபூஷ்கமா தமக்குச்சனித்திந்தத் தார்ணியில்,வ ந்தமதலையி தெடுத்துநீங்கள் வளர்ப்பீரென்மட மயிலுரைக்கச், சிந் தைமிகமுனிந் துமறுகத்தாப் இறோர்சனபயினில்காணமில்லா, திந்த வுரை சொல்லாமோவென வியம்பமயில்மறுத்தீதுரைப்பாள். (௱௯)

வேலேந்தியகரத் தரசரேறே விளங்குமதிவாக ரபூஷகமா, போ லேயெனதுசே யிருக்குமானுற் பொருத்தமுடனெடுத் தருளுமல்லா ம், பாலோகருஞ்சொல்லா தெனக்கொவ்வாத பலிகத்திலிலென்னைப் படுத்துமென்னச், சேலேதருங்கல்லூன் மதலைதன்னைச் செய்யபுகழ் வேந்தர் திருமுன்வைத்தாள். (௱௰)

வைத்தசிறுபாலன் றன்னைநோக்கி வள்ளல்நபிதோழ மாரெல் லோரும், பொய்த்தமொழிபேசா ரபூஷகமா போலாமிறையவன்புது மைதன்னை, மெய்த்தமறைதேரு மறிஞராலும் விளங்கவரிதாமென் ற ருளியபின், கைத்தகுபிரேர்கள் சிரமறுக்கும் கதிர்வாளுமறிது கவ லலுற்றார். (௱௰௧)

எனதுமகனென்ற னுரையல்லாம லேதோரிடங்களி லேகவில்லை, நினைவிலொருதரை யவர்தனக்கு நிக்காகுபுரிந்தியான் கொடுக்கவில்லை, ம னகப்பதிமேவு மதினந்தன்னிம் கன்னியுனைநானுங் கண்டதில்லை, ம னதுகெணியாமலிவையுரைத்தாய் மயிலேயெனப்பின்னுமவுல்வதானர்

எகுதிமாபினின் மட்க்கொடியே யெங்கள்குலமுங்க ளினத்தின் மாதைதப், பகுதியுடனிக்கா கெழுதலாமோ பாலன்றனக்கீன்ற பால னொன்றாய், தகுதியுளக்லா லதுதனிலோ தன்மைமறுமிலோசாற்று கென்ன, மிகுதிபுகழ்சேரு மாசர்கூற விளங்குமயிலன்னாள் விளம்ப லுற்றாள். (௱௰௨)

எனக்குநலாலெங்கள்மரபின்படி என்னைப்பயின்றோள்சொல்லி னாங்கினதாம், மனக்குன்றெனும்புயத்தபூஷகமா தன்மேலுளகுக்கும ரியேயென்ன, வனக்குங்குமழல் மடந்தைசொல்ல வந்தவராலாமே

றுரைப்பாயென்ருர், சினக்குங்கதிர்வேலீர் தேனுமென்னத் தெரிவை யடிப்படி செப்பலுற்ருள். (௱௰௪)

வேண்டாக்கருமத்திற் குமதுபாலர் விரும்பியமைழத்தென்னமே யமனம், பூண்டாரென்னினு லாகுமடடும் புத்திமதிசொல்லிப்பொரு ந்தாதென்னைத், தீண்டாதகலுமென் றுரைத்ததெல்லாஞ் செவிசிப்பு குதாமற் றீங்குசெய்தார், வாண்டாரணிதிருப் புயத்தீருங்கள் மகனுர் தமைக்கேளு மெனவுரைத்தாள். (௱௰௫)

அழகுநிரல்வடுவெடுத்துவந்த அமுதமொழிவேந்தர் பூஷகமா, வுள தென்றுரைத்தாலென் பாலகனை யுவந்துவளர்த்திடு மொளித்தா ரெனிற், றெருழுகைக்குரியதோர் காயமேவுஞ் சுருதிதனைத்தொட்டுத் துணிவுடனே, தழுவியெனதுகற்பழித்தாரென்னச் சத்தியஞ்செய்துக ருவேனென்ருள். (௱௰௬)

கூறுமொழிகேட்டு மகன்மீதிலே கோபமயிர்க்கால்கள் குப்பாய த்தைப், பீறிவெளிதோற்ற மனம்பதறிப்பேதையொருமாற்றம்பேசலு ற்ருள், பாறுதொடர்வேற்கை யரசேயுங்கள் பாலனிவைக்கெல்லாம் பாத்திரமோ, சிறுங்கொடியவ னென்றுதந்தை செய்புமரியாய்ஞ் செ ப்பக்கேளும். (௱௰௭)

விளங்குமணிமார்ப ரபூஷகமா வீதிவிளையாடி வரும்வேளையிற், சுளங்கொண்டிடும்நோய்க்கு மருந்தெனவே சாராயந்தனைத் தான்கொ டுக்க,வளங்கொண்டருந்தியே வெறியாலென்றன் மனையிற்புகுந்தென் னை யலக்கழித்தார், துளங்கொண்டிடும்வேந்தர்க் கரசேகெர்ப்பந் தரித் தேனெனப்பின்னுஞ் சாற்றலுற்ருள். (௱௰௮)

வெறிதீர்ந்தறிந்தபின் மனம்பதறி வீழ்ந்தார்பனிரல்லடி தாங்கல ங்கிச், சிறியேனறியாயஞ் செய்தேனெனச் செங்கைகொடுமுகந்தனி லறைந்து, மறிவாய்கதற்நிவ் றிரங்கினபோல் வாய்விட்டரற்றின ரவர் மேற்குற்றம்;உறுமோவிதிவச மெனதிடத்தி லுற்றதொருகெர்ப்ப மெ னவுரைத்தாள். (௱௰௯)

உண்டாகியகெர்ப்பம் வெளியுதித்து மொளித்துமறைத்தும் யா ருெருவருக்கும், விண்டேனிலைமூன்று மாதமட்டு மிகவுங்கொடியவ னெனதுதந்தை,வண்டார்தொடைத்திரு ரிடத்தினிற்போய் மவுலெ ன்றனைப்பேசா வசையுரைத்தான், தண்டாமரைப்பதத்தரசேயிந்தச்சு மையிலடுத்தேனுனெனச்செப்பினுள். (௱௨௰)

உடுக்கத்துகிலெனக் களித்தானில்லை யுன்னத்தகுமொன வுணவி ந்திலன், வடுக்கொள்ளுலகினி லுதித்துவந்த மதலைதனைப்பேணிவள ர்ப்பிரென்னக், கடுக்கண்டெனப்பேசுங் கொடிய தாதைகல்னனில் வி

ழிக்கான்மாட்டேனென, நடுக்கத்துடனின்று மயிலனையாள் நன்றிய
சரோ டுரைத்தனளே. (௱௨௧)

நடந்தகருமங்க ளானதெல்லாந் நாயனுமறுகேட் டகத்திலெ
ண்ணி, மடந்தைதனக்கேற்ற மொழிகள்கூறி மாதேயுனதாசைமகன்ற
னக்கே, யடர்ந்தவயதிரெட் டாகுமட்டும் அன்னமுடுமொன்றருளிடுவே
ன், படர்ந்தமனப்பீடைதனையகற்றி விடுவாயெனவேந்தர்பகர்ந்தனரே.

தேசம்புகழ்வேந்த ரனுமதிகள் செய்யமடமாதுக் கருளிவெள்
ளிக், காசிலொருநாற்பதெடுத்தளித்துக் கலையுமொருமாத்தைக்கொடு
த்து, வாசல்தனிலுனக் கனுப்பிவைப்பேன் மதலைதனைப்பேணிவ
ளர்ப்பாயென்னத், தேசுதரித்தவேல் விழிமடவாள் திரும்பிமணிமாட
ஞ் சேர்ந்தனளே. (௱௨௩)

மாதுமதலையைக் கொடுபோனபின் மவுல்வாரசுகாபி மார்களுட
ன், வேதநெறிதேரும் யார்களேயான் விடுதனிலேகி வருமளவு, மீது
சபைதனி லெழுந்திரா மலிருங்களெனவேந்த ரியம்புநேரம், ஆதிய
ருட்சேரும் நபிதோழமா ரனைவருமுட னருள்வதானார். (௱௨௪)

முழுசல்நபிமார்க் கரசரான முகம்மதுறசூல்நம் மாதுலரே, ய்
ரசர்பணிந்தேத்தும் நாயகமே யகத்திலினிதேகி வருமளவும், இருமெ
ன்றுரைத்தவா றேதெனவே யார்களுரைத்தபோ தெனதுமகன், கரு
மந்தனக்காமென் றரசர்கூறக் கலைதேர்சகுபிகள் கவல்வதானார். ()

ஆசைக்கலவியி லுமதுபால ரதிவினினைவிது வடுக்கவில்லை, பா
சிக்கெனும்பொல்லா தவனிலவைப் பலிஹத்தினிலாகப் படுத்திவைத்
த, தோசத்தனமெல்லா மவன்றலைமேற் சுமக்குமெனச்சொல்லச் சுரு
திமறை, யோசைக்குரலாரைப் பயந்தெடுத்த வுமறுமறுமொழி யுரை
க்கலுற்றார். (௱௨௬)

வல்லோன்மறையேவல் தனைவிலகி வழிகேட னாகிய சனுவிலும
ற, பொல்லாதவர்மீதிம் பூண்டகத்துப் பூமிதனிற்றீரா திருக்குமானு,
லெல்லாவுயிர்களுநம் வருத்தமாகும் எவுமல்கியாமத்து நாளையிலே, நி
ல்லாதெரிந்திடுஞ் ஜஹன்னமென்னும் நெருப்புக்கசையினு லடிப்பரெ
ன்றார், (௱௨௭)

அறமெய்த்துலகாளும் நபியுல்லாவுங் கருகரொனவங்க முமினீங்க
ளே, திறன்மத்தலைமையோர் புவிமேலொரு சிறியோர்சனுவுறுந்தீங்
குசெய்தால், மறைமெய்ப்படிகத்து விதித்திருக்கமாது நெகிழ்ந்து
தா மரித்தாரெனின், முறைமைக்குருநபி திருவாக்கினுல் மோசப்பெ
ரும்பாவி யாவரென்றார், (௱௨௮)

அந்தமொழிதனைக் குறுதிகொண்டோ மானபடியாலென் னருமைமகன், வெந்துதழல்வீசும் நரகமதில் வீழாதவர்பேரில் விதித்தகட்டளை, யெந்தவகைபாலும் புவிமேற்கட னிறுத்துவிடவேணுமேயொழியப், பிந்தவிடமனம் பொருந்தேனெனப் பின்னுமவயவேந்தர் பேசலுற்றார். (ாஉசு)

உலகந்தனிற்பாம சூலுஸ்லரவுக் குடையோராகுள்வேதந் தனிலுரைததான், விலகப்படுஞ்சது வொருவர்செய்தால் விதனமுறுங்கத்துச் செய்யுமேன்றும், கலகத்தினிலதை மறைத்தாரெனிற் கழுமமவருட னுவாரென்றும், நலமுற்றிடும்பிதை யறிந்துநீங்கள் கவிமலெங்கனமெனகட்டந்தார். (ாஉஎ)

நாட்டிம்புகழ்வேந்த ருமதுகத்தாப் கடந்துமலரிமாடஞ்சூகுறுகிவாயம், பூட்டுங்கபாடத்தைத் திறந்திடவே பொறுக்கும்விசைப்பூட்டுப் பொருந்திலதாம், கோட்டுமகயானைபிடித்தவென்னக் குமுதமலர்க்காய் கொதிதட்டவே, நீட்டுமணிமேடை மாடகூடஞ் சேர்க்கிற்கிடேன் றைசந்தனவே. (ாகூக)

அசைந்துநெடும்பூட்டுந் தெறித்துவிட வகத்திற்புகுந்தின்ற கருணைமைக, லசந்தபுகழ்தாயா ரிடத்திவிருந் தொழியனுக்கின்றங் கிருந்தாரப்போ, வசந்தகுணமாறிக் கோபமுடன் மகனேயுனைனிமதுணைமயிலே, இசைந்ததுணியாவி லொருசெயலு மினிமேலுனக்கில்லையெனவிசைத்தார். (ாகூஉ)

சுரும்புலர்டிசைபாடு மரபமாலைத்தோன்றலிவைகூறத் தாயமன, மருங்கொன்னிறம்போலே தளதவென வழகுதருந்திருமேனியெல்லாங், கருங்கொள்ளிறமாகி திறன்குலேந்து கைகால்பதறியே கலிவாயினில், விரும்புமொழிபனந் தனைமறந்து மெய்சோர்ந்தெழுந்துபின் விராம்பலுற்றார். (ாகூங)

நபிமார்க்கரசென வருபிறகுல் நபிகுர்தமக்குப்பின்னொருவருங்கும், புவிமீதினிலோகி யிலேயெனவே புறுக்கான்றனில் வேதப்பொருளுரைத்தான், அவிசவெனக்குவங் தடுத்ததென்ன வறிந்துமொழிந்தீரென் னுண்டகையே, செவிதாக்கருமமே துவாயிரென்னச் செங்கோலரசுளா செய்வதானர். (ாகூச)

எனதுமகனேநா னொருகரும மெழிலாய்வினவில்நீர் வேறுமொழி, தனையிங்குளாயாம லுன்மைதனைச் சாற்றுவீரெனச்சொன்னாப்போ, மனதுநீனைவாலுங் கனவினுலு மறந்துமொருபொய்களுரைத்ததிலேன், களிதிபுகழ்நாயன் மறையின்கீர வுக்குமொழிவேறு வெனாக்கூறினர். (ாகூரு)

காதறாநகர்நாகந் தலையறுத்த கமீபுமுகம்மது நபியுரைத்தார், பா
கார்மொழிவேதந் தனையோதினோர் பழுதுவரும்பொய்கள் பகர்ந்தா
ரெனில், வாகாகியவேத மவர்கடன்னை வருத்துமதாயினி லாக்குமெ
ன்ன, ஆகாதுமும்பொய்க ளுரைத்தறியே னையாட்கலுவேன் மெய்யே
யென்றார்.
(௱௩௰௬)

யாதாமொருமார்க்கர் மனதறிய நலங்கேடுளபொய்கள் நவிலும
து, தீதாகியபாவ மடங்கலுக்குஞ் சிரசாமிருதயஞ் சிலையாய்விடும்,
யோதாமெனுமாற்றந் தனையறிந்து பொய்களொருநாளும் புகல்வதில்
லை, காதாவெனும்வேத நாயகமே சதமொழிவேறெனச்சாற்றினார்.

மொழிவேமென்னக்கூறு மகனைநோக்கி மூன்றுளொருதாமெனதி
டத்தில், வெளிபோய்விளையாடி வருவேனென விடைகொண்டெழுந்
தீரங்கேதுசெய்தீர், தெளிவாயுரைத்திடு மெனவிளம்பச் சிறக்குமணி
மாடத் தெருவீதிபோ, யொளிசேர்மணிமாடந் தனில்களுதி யுறையு
ந்திருவாய லடித்தேனென்றார்.
(௱௩௰௮)

சொன்னீரதுமெய்யா மவணிருந்து சோருங்கள்ளியக் குடித்தது
ண்டோ, எந்நேரநிந்திடும் தாதையேநா னெனதுநினைவிலும் பருகவி
ல்லை, நன்னேரறியாத கொடியோனென்ற னசலுக்குறமருந் தெனவ
ளித்தான், செக்கீர்தரும்வேலீர் குடித்தேனெனச் செப்பினாரப்போ த
ரசுரைத்தார்.
(௱௩௰௯)

கரவுங்கொடுஞ்சூதுச் செய்ததுண்டோ கன்னேயெனக்கேட்க
க் கவலுவாரென், விரகமதியினு லடிக்கவில்லை வினைன்மதுவீந்த வெ
றியினாலே, நரகந்தனைத்தேடுஞ் செயல்வினைத்தே னம்மாவறிந்ததோர்
நாமறியா, வரவென்றிறையவன் பொறுப்பானென மனதுதனில்நினை
திருந்தேனென்றார்.
(௱௪௰)

அரக்குப்பருகிய வெறியுண்டாகி யாகாச்சதுச்செய்தா லவர்கள்
பேரில், உரக்கப்படத்தாக்கும் கத்துவிதி யுண்டோவில்லையோவென்
றோதுமறை, யிருக்கும்பொருள்தெரிந் திலையோவென்ன வேந்தலுமெ
ழுதா மியம்புநேரம், வரக்குன்றெனும்பால ரபூஷகமா பாவாமுகநோ
க்கிமெவுல்வதானார்.
(௱௪௰௧)

வேதந்தனிலிந்த நட்டபடியின் விசளம்பிபாமா யறியேனெனச்,
சீதமணம்வீசும் புயத்துமறு செல்வரபூஷக மாவுரைக்கக், காதவழித்
தூரங் குளிர்ந்தநறை கமழூமுகம்மது நபிமாதுலர், ஓதும்புறுக்காலை
யெனவுரைத்த வோசையுடனெடுத் தோதலுற்றார்.
(௱௪௰௨)

உசந்தமறையோதுந் தொனியிசைகேட் டுதுமானலியாரும் அச
ஹூசைனும், வசந்தகுணமுள்ள யார்களெல்லாம் வந்தாரரசர்தம் மாளி

கையில், இசைந்தமனைவிசும் நபிதோழரே யெனதுமகன்குக்கு மே
தெனவே, யசந்தமனைதன்றி குறுணுயத்தி லாராய்ந்துபாரு மெனவோ
தினார். (௱௪௫)

ஆசாரமுள்ள அபூஷகமா வனையுஞ்சுருதிநே ராயத்திலேசர், லே
சானகுக்கு முன்டோவென்ன நினைவுகொடுகேட்கு நேரமதில், கோ
ஜாலநபி மாதுலர்தங் குமரர்குரலோசை செவியிற்கேட்டேப், பேசாதி
ருந்துநம் சனங்களெல்லாம் பெய்யுமழைபோலின் றழுதனரே. ()

இரங்கிச்சலித்தழு தவரவரே யேகனிடத்தினி லுமறுக்த்தாப்,
தருங்கற்பகமெனு மபூஷகமா தமக்குவரும்பலாய் நினைத்திசொன்ன, வ
ரங்கிட்டியதுவா விரக்குநேரம் வள்ளலுதுமானும் அலிப்புலியும், நெ
ருங்கிட்டபூஷக மசவோதிய நோய்ப்பயனேதென் றலர்ந்துநின்றார்.

வர்சந்தருங்புய சபூஷகமர் வனமைக்குற்றேது முடியுமட்டும்,
நேசமதின்பொரு ளேதெனவே நினைவினுடன்கேட்க நேர்மறையி,
ஞேசைப்பொருளெல்லாஞ் சனச்செய்தோருக் கொருனூறடியெனவு
ரைப்பதன்றிப், பேசிவெளிதான வகையிலொன்றும் பெரியோனருள
வில் லெனவுரைத்தார். (௱௪௬)

உரைக்குந்திருவேதப் பயன்றிந்தே யூரினுள்ஜன மொருமுகமா,
யிரைக்குங்கடற்போல விழிநீர்சிந்த வேங்கிப்புலம்பிநின் றிதுரைப்
பார், தரைக்குங்ககனுக்கும் புகழ்நிறுத்தத் தக்கமதலைசெய் தவமிது
வோ, விரைக்குங்குமப்புயத் துமறுகத்தாப் விடுவதிலையென மிகவா
டினார். (௱௪௭)

வதனமிகவாடி யழுமந்நேரம் பாவாஇறையவன் வரவிடுத்த, வி
தனபலாய்தனக் கெனியேன்மனம் விரும்பிசபூர்செய்து கொள்ளுமே
னெனச், சுதனிவ்வுரைகூறக் கேட்டேலவ் துனுக்குத்திடிகண்ட தோ
கையென்ன, வதனமதிசாய லபூஷகமா வன்னையெழுந்துரை யருள்வ
தானார். (௱௪௮)

இசுலாமெனுமுடற் பிறந்தோர்களே யிளமைவயதான வினியம
க, னசலாகியசூரன் கிடந்துடலம் நடுக்கமதுநன்றாய்த் திரவில்லை, வச
மாகியகத்து றூறடியும் வருத்தமதுதாங்க மாட்டாரந்த, நிசமாம்அடி
யெல்லாம் யான்கொடுப்பே னிங்களரசர்முன் னிகழ்த்துமென்றார். ()

கூறுமொழிவேந்தர்க் குரைத்திடவே கோபமெழுந்திட் விழிசிவ
ப்பச், சிறிமனையாளை நோக்கியப்பரம் செல்வாயெனச்சொல்லத் தே
ன்மொழியார், மாறுமொழிபேசா தொதுங்கிநின்றார் வள்ளலுமவைப்பா
ர்த் துன்மகற்குப், பேறுகொடுத்திடெனன் றிறையிடத்திற் பெருகுந்து
வாகிரல் திருப்பாயென்றார். (௱௫௰)

நிலையாமகுசறு வழிதனிலே நின்றோர்சிரித்திடப் பலிக்கத்தாக்கி, புலைவர்ப்பெழுகென்ன நரகந்தன்னி லோட்டிவிடுவாரென் றனழுருகி, யலையாப்பதிசோர்க்கம் புகுதவென்றே யாநிமறைமேய்வனதின்படியே, கொலையாய்விடுங்கத்து மகனார்தம்மைக் கொள்வேனெனக்கையைப் பிடித்திழுத்தார். (௱௩௧)

கையைப்பிடித்திழுத் தேகந்நோங் கவல்வாரெனையீன்ற காவலரே, தொய்யுமெளியேனைக் கொடுபோம்வகை சொல்லுமென்க்கேட்கத் தோன்றலானே, ஞாயமறவாழும் நபிதோழமா ரனைவோரிருக்கின்ற சபையிடத்திற், செய்யும்பலிக்கத்துப் படுந்திருக்குஞ் செய்யக்கொடுபோறே னெனவுரைத்தார். (௱௩௨)

மாற்றமினைக்கேட்ட போதிலந்த மறையோரிருக்கின்ற சபைதனிலே, சேர்த்துக்கொடுபோக வேண்டாமென்னைச் செய்புஞ்செயலுங்கள் திருமனதுக், கேற்றபடியிந்தமாளிகையி லின்னேபடுத்திடு மெனவுரைக்க, வேற்றலங்கியகரத் தரசர்சியம் வெற்றியுமாற சுனாக்கலுற்றார்.

நாயனருள்வேதந் தனிலுரைத்தான் நாளுச்செயல்யாருஞ் செய்தாரெனிற், காயுங்கடுங்கோபத் துடனவரைக் களரிதனில்விட்டுப் பலிகத்தாக்கித், தேயும்படிபாவத் தொலையகத்துச் செய்தாலதுகண்டு தீங்குசெய்வோ, ரோயும்படிதவிர்ந் திருப்பாரென்ன வுரைத்துமகனாரைக் கொடுநடந்தார். (௱௩௪)

மகனைப்பிடித்துக்கொண் டேகந்நேரம் வள்ளலபூஷஹ மாபெரியோர், மிகநட்புடையோர்கள் மதினாநகர் மேவுந்திறல்சேரும் வீரர்களுந், தகைமைக்குணமுள்ள மடவாருடன் சகலஜனங்களு மழுதுநின்று, க்கனைத்தொடுந்தொனி யிரைச்சலார்க்குங் கடலாமெனக்கனாங் தழுதேகினர். (௱௩௫)

அழுதுபாரதவித் தவரவரோ யந்தோவிளமையி லருமையாக, முழுதுமுணர்ந்தவர் வணக்கமுள்ள மூமினனவர்க் கிணைவருமோ, பழுதுமறுப்படா மேனியெல்லாம் பாரக்கசையடி படமுதனுள், ளழுதும் விதியிதோ விளவரசர்க் கென்னமனஞ்சலித் தழுதேகினர். (௱௩௬)

சனங்கள்திரண்டுசூழ்ந் தழுதுவார சலிப்புமலயவேந்தர் தங்கோபமூ, மனந்தான்பதறியின் னபூஷகமா வரவுமாழ்கிபேசி யிருந்தோர்கண்டே, இனங்கள்புகழ்ந்தேற்று மிளவரசே யிதுவோதலைநாளுனெனழுதேதனவே, கனங்கள்பொழிந்திடு மழையதுபோற் கண்ணீர் சொரிந்திருந் தழுதனரே. (௱௩௭)

உபய்கடல்போலவ் விருந்தவரு மூரிலுள்ளபேரு மழுதுநின்ற, சபையிலிரசின்ற யிளவரசர் தம்மைக்கொடுபோய்முன் னிறுத்தியபின்,

கனையொன்றுமாயாத அபூஷகமா கல்புமிகநாணிக் கிதறியழும், அ
லையின்மணிமாடந் தனிலிருந்த வன்னைசெவியில்லங் தனுங்கபதே.

• மைந்தனிரங்கியின் றழுதசத்த மாதாதிருக்காதி லேறிட்டேவ, சிங்
கைதமோறி மறிமயங்கிச் சேணிலிழந்தமான் கன்றுபோல, விந்தைம
லர்முகஞ் சாம்பயப்போ வெள்ளையழற்பாய்ந்த விதமகமுஞ், சிந்த
விழிநீருமாகவேங்கிச் சேமமன்னை தனி லழுதிருந்தார். (௱௩௯)

ஒருவன்றிருநாமந் தவிராதெடுத் தோதுமகனேநீ ருடுத்திருக்கு
ஞ், சருவந்தணிதிகழ் குப்பாயமுஞ் சலனைவத்தநிலெல்லாங் களற்று
மென்னக், கருவந்திருள்மேகக் கொடைக்கரத்தார் கவலுமுனாகேட்டு
க் கலக்கமுற்றார், பருவந்தவிராதார் வயதுமொரு பத்தொன்பதுசென்
று பாலகரே. (௱௪௰)

கலங்குமிருதயக் காளைதன்னைக் கண்டேபருகம்வாடிக் கலக்க
முடன், றுலங்கும்புகழோரே யெதுவுரைத்தீர் றுறவார் திருமேனிச்சு
தனர்தம்மை, நலங்கொண்டணிமாற்றி களற்றுமென்னவங்கின்றிருடல்
நாணி நடுக்கமுற்று, ரலங்கன்னிருப் புயத்தீரென்னினெவசருமறப்
போ தருள்வதானூர். (௱௪௧)

உவரிக்கடல்சூழ்ந்த புவியிலோர்ந்தாக் குற்றஷபா அந்தச்செய்தி
யேற்று, நவரத்நமாலைப்புயத்திருநல்நயினர்முகம்மதுநபிநமப்போ,
லிவருக்கழகுமா மறைநெறியு மீமான்கொடுத்தாரென் றிவல்தன்னை
த், தவிரத்தகுமோகான் சநகுமீட்டேனும் அக்கோனறைகேட்காதெ
னமொழிந்தார். (௱௪௨)

தரையுள்ளடுமெல்லொரய் தனைமீட்டொரு தையல்தனக்கீந்தத
ருமருவனத், தரசருரைகேட்டங்கறிவோரெல்லாமாதிவிதியோவென்றய
ர்ந்துநின்றார், விரையுந்திருவுநின் றனுதினமும் விளையாடியபுயத்தபூஷ
கமா, கரையுமிருகல்லணிர்தரவணிந்த கலைகளடங்கலுங் களற்றினரே.

பொதியுந்துகிலுரித் தொருசிற்றுடை புனைந்துசுடர்வீசும் பூஷக
மா, மதியந்தனைராகுங் கேதுவும்போய் வளைந்ததெனநாணம் வருத்த
முமுஞ், சதியின்பயமும்வந் தொளிகுறைந்து தன்னைமறந்தாவி தா
ன்பதறி, விதியின்பயனோவென் றழுதழுது விழிநீர்தரவாடி மெலிந்த
னரே. (௱௪௪)

கல்லணிர்சொரிந்தழு திரங்குவது கத்தாபுதல்வர்கண் டாகமெய்
லாங், தண்ணீர்தனிற்றேய்ந்து மதியமென்னத் தளம்புவதுதெரிந்தவ
னியுள்ளோர், பலன்னுமொழித்திருப் பாலனிந்தப் பாடுபடவிதிப் பய
னோவென்ன, விண்ணோர்பதியெங்குந் தொனிகளார்க்கவிளம்பெதி
தாய்தின் மழுதனரோ. (௱௪௫)



116886

அப்போதிறையவன் கஸமத்திலே யதிகம லாயிக்கத் தனேவோர்க ளு,மொய்ப்பாயாளுமநாயகனேயிந்த முழக்கமினைத்தலே தெனவிள ம்பத், தப்பாதுனைபேசு முமறுகத்தாப் சறகுதவிராமற்றுரணியில்,கு ப்பாயியமகன் றனேயேகத்துக் கொள்ளுமினைத்தலி தெனக்கூறினன்.

இறைவனிவைகூற வானவர்க ளேகன்கலறத்தி லிசைத்திடுவார், அறையுங்கடல்சூழ்ந்த புவியிடத்தி லரசருமற்ற அபூஷகமா, சமகி ன்படிகத்துக் கொடுக்குவது தன்னைத்தெரிசித்து வருவோமென்ன, வி றையும்புகழ்நாயன் விடைகொடுக்க நெறிசேர்மதினத்தி லிறங்கினரே.

வானோர்மதினமா நகர்தனிலே வந்துமஜ்லிசை வணங்கிருந்தார், ஆனோர்கொடைக்கரத் துமறுகத்தா யருள்வார் அபூலகு தனையழைத் துத், தீனோர்நிலதமாமெனது திருச்செல்வர்தமைக்குஞ்செய்வதற்கு த், தானேயுனையல்லால் வேறொருவர் தகுமதலவெனச் சாற்றினரே.()

அவனிபுகழ்ந்தேற்றும் ஆண்டகைதம் அருமைக்குமாரை யடி யேன்மனக், கவனமறக்கரங் தீண்டுதற்குக் கல்புபொருந்துமோ கடை நாள்மட்டும், புவனந்தனிலிந்த மாற்றமதுபோமோவெனச் சொல்லிப் புலம்புகின்றான், மவுனமுடன்வுள்ள துமறுகத்தாப்மவுல்வாரபூலகு ம னந்தேறவே. (௱௭௰)

அரியபெரியதோர் நாயகனுக் கடிமையலவோநா மாகையினும், தெரியுமறைதனிலிருந்தவண்ணஞ் செய்தாலிறையவ னருட்சேரலா, மூரியமனுவோர்தம் முகத்திச்சைக்கா யொருவன்மறையேயவல் தனைம றுத்தால், கரியநரகத்தி லநேகநெடுங் காலங்கிடப்பனென் றோதினரே.

எனதுதிருப்பாலர் தமக்குவந்த இடறுங்கருமத்திற் கேதாகிலு, மனதுதறுகியென் முகத்திச்சைக்காய் வருத்தந்தனக்கொல்கி யடித்தா யெனி, லுனதுநலவெல்லா மழிந்தெரியு மொயிலுக்கிரையாவா யென வுரைத்தார், நினைவங்கனல்மெழு கெனவிருந்தோ னெட்டூரெஞ்ச ளு கினனே. (௱௭௧)

நெஞ்சமிரும்பாக அபூலகென்போ னின்றனைவதனிலெளியோ ர்கட்டு, தஞ்சமெனவரு மபூஷகமா தரனேமெனக்கண்ணீர் தாரெழு க்க், கஞ்சமுகம்வாடிச் சிவந்தமேனி கருகிப்பாதவித் தழுவதுகண் டின்சொலெனும்வேத ருமறுகத்தா பிரங்கியழுதுபின் னீதுரைப்பார்.

கண்மணிமணியேயென் னுயிரேயென்றன் கருத்தேயரு[illegible] காவியமே, யண்ணலிறசூல்தங் குலநெறிசே ரமுதுமகக்குலன் [illegible] கையினுல், நன்றுமெனதாசை யுனதுகாயம் நரகம்புகுதாமல் [illegible] னருள், இன்னமுடன்சொர்க்கப் பதிதனிலே சேர்ப்பானென்றினு[illegible] லேபலுற்றார். (௱௭௨)

அருமைமகனோ னுமக்கிரங்கிய படியாதிருந்திடலாகிநத்திற், பெருமையுடையதோர் நாயன்முன்னே பேசமுகநாணிப் பேதலிப்பே, யிருமையுலகினி லுமைபடித்தா லிருபெருஞ் சொர்க்கப்பதிதனிலே, யுரிமையுளநல்லோர் ருடன்கூடியே யூழியுள்காலம் வாழ்வோமென்றார். (௭௭௪)

கூடத்திலிம்வாங்கு மலைமேல்நின்று கூறும்படி நீனேர் குலம்விளங்கத், திடத்திலுலகாளு முமறுகத்தாப் செப்புமொழிகேட்டுத தீடுக்கமுற்றுக், கடுத்துன்றிடுமீன்போ லபூஷகமா கண்ணீர்சொரிந்தாவி கலங்குவோம், நடத்துநெறிநீதிக் குரிசிலான நாயன்புலியலி நவில்வதானார். (௭௭௫)

மார்க்கநெறிதப்பா னுலகமாளு மன்னர்தவத்தினால் வரும்பாலனை, யார்க்கும்பொருந்தாத காரியத்தி லாகப்படுத்தியன் பருவிமனைத், தீர்க்கமுட்டனவர்க் கிந்தபொல்லாத் தீயோன்றனைக்கொண்டு வருகவெனப், பார்க்குளடங்காத புகழ்சேரலி பையலபூலகு தன்னையேவினார்.

வரிசையறுசினிற் புலியாகவே முகம்மதுநறகுல்தம்மலர்க்கரத்தி, னரியதிருவாழி வாங்கியிந்த லகிலந்தனில்வந்தோ ரருளவெகு, துரிசமுடனோடிப் பெரும்பாதகச் சூட்டன்றனைககண்டு பிடித்துவந்து, குரிசிலெனவரு மபித்தாலிபு குமாரலியார்முன் னிறுத்தினனே. (௭௭௭)

துங்கப்பரிவேந்த ருமறுகத்தாப் சுதனுகியவள்ள லபூஷகமா, பங்கப்படும்கத்துமுடியுமட்டும் பாவிதனைக்காவற் படுத்துமென்னச், சிங்கப்புலியலி யுரைசெய்யவே சிறைச்சாலையினிலங் கவனைவைத்துச், செங்கைத்தருவென்னுமரசர்கோமான் செல்வர்தமக்கேற்றமதியுரைப்பார்.

ஐயூபெனுநபி தமக்குவிட்ட வரியபலாய்போலோ ரடியாருக்கும், தூய்மையோன்விடவில்லை வரும்பிணிக்கு சக்கூறுசெய்தங்கு தொழுதிருந்தார், ஹையூபெனுநாய னபியுடைய கல்புதனைக்கண்டே கருணைகூர்ந்து, மெய்யூறெனும்நோவு தனைமாற்றியே வேண்டும்பதவிகள் மீகக்கொடுத்தான். (௭௭௯)

திருத்தமுடன்வேத மருளவல்ல சிமானிபுறுகீம் நபியுடனே, வருத்தமுறுமாற்ற முனைத்தாலுந்தம் மகனைக்குறுபானீர் கொடுப்பீரென்னப், பொருத்தமிசுமாயீல் நபியைக்கேட்கப் புதியோனென்வசொன்னதற்கென்னது, கருத்தில்கபூல்செய்தே னென்னவுரைத்தார் கத்தன்றகுமத்தைக் கருதித்தானே. (௭௮௰)

நெருப்பாலிடங்கண்ணி தனையுண்டாக்கி நீங்கவுரியாத நம்றூதென்போன், றருப்போலருளிபு றுகீம்நபி தம்மைப்பொறித்திடத் துவ

யியும், விருப்பாயிறையவன் செயலெனவே மிகவுஞ்சபூறுசெய் திருந்தாதனால், இருட்போல்வரும்பலா வெல்லாமகற்றி றையோன்றருமத்தால் டாக்கினனே. (௱௮௧)

தருமநபியஃக்கூ பருள்பாலகர் தரணிபுகழ்ந்தேத்தும் யூசுபினல், அருமையறியாமற் றமயன்மார்க ளாழ்ந்தகிணற்றினிற் றள்ளிவிடத், திருமெய்வருந்திய மிறையவன்றன் செயலென்றிருந்தன ரதுவல்லாமற், கருமைவிழிமாதர் சுலைஹாவென்னுங் கன்னியவர்மீதிற் காதல் கொண்டே, (௱௮௨)

உரிமையவர்தமக் காவேனென வூரிலுளமாதர் வசையுரைக்க, வருமையலைத்திரு மெனக்காதலாய் மடிதொட்டிழுந்தனள் மறுத்ததனா, லிருமைவிலங்கிட்டுச் சிறைச்சாலையி லிருத்துமதற்கெல்லாம் சபூறு செய்தார், பெருமையுடையதோர் நாயகன்றன் பேறும்றருமத்தும் பெறவேண்டியே. (௱௮௩)

பேறுதருமிது ரீசுதம்மைப் பெற்றகொடியவ னொருகுபிரோ, னீறுபடவெகு நெருப்பிலிட நெஞ்சங்கலங்காமல் சபூறுசெய்தார், வீறுந்தகுதியு முடையநாயன் வேதநபிதம்மை மிகமகிழ்ந்தே, யேறும்புகழ்நல மவருக்கீந்த தின்னதெனமாந்த ரிசைக்கொணதே. (௱௮௪)

மற்றநபிமார்க ளவரவர்க்கு வல்லோன்பலாய்களை வரவிடுத்தான், சித்தங்கலங்காம லிறையவன்றன் செயலாமெனவெண்ணி சபூறுசெய்தார், கத்தன்றுனியாவில் வருத்தங்கள்விடு களைகப்பதிவாழ்வு தனைக்கொடுத்தா, னுத்தமகனேநீர் சபூறுசெய்தே யுடையோன்கலாவுக்குப் பொருந்துமென்றார். (௱௮௫)

பொருந்துங்கலாவிதி யிதனால்வெகு புகழுஞ்சட்டமியாத பொன்னூரிலே, யிருந்துநெடுங்காலம் வாழலாமென் றேந்தலுமறுகத் தாபியம்பத், திருந்துமிசும்ாயில் குறுபான்செயச் சித்தமிரங்கின ராகையாலே, வருந்தும்கலாவுக்குப் பொருந்திவிட்டேன் வல்லோனனியாணையெனவுரைத்தார். (௱௮௬)

வரிசைநபிமாம னுமறுகத்தாப் மவுல்வாசபூலரு தனையழைத்துத், தெரியுமறையோது மபூஷகமா செங்கைதனைப்பிடித் தீழ்த்தேகியே, கிரிசைகெடுத்திடுஞ் சனச்செய்தோரைக் கிடத்துமிடத்தினிற் படுத்துமெல்லாத், துரிசமுடன்பிடித் தவன்கொடுபோய்ச் சோராதவிடத்திற் கிடத்தினனே. (௱௮௭)

நிலவைப்பிடித்திழுத் தோடிவந்து நிலத்திற்கிடத்திடு மாறுபோலக், கலைவைப்புழுதுமான் மதக்கமழுங் காயநிலமீதிற் றோய்தல்கண்டே, சொலுதற்கரிதான துயரமெல்லாஞ் சொல்லாதொருவர்க்கு மின

தட்க்கி, யுலவைக்கிணையான பூஸஹபே லொறுக்காதடிக்கையென்
ரேறுதினரோ. (௱௮௮)

அடியென்றுரைத்தபோ தவனுரைப்பா னரசர்பணிந்தேத்தும்
ஆண்டகையே, படியிலிவரைநா னடிக்குமந்தப் பாக்கின்படியேது ய
கருமென்ன, நெடியோன்மறைதனி லிருந்துவல்லனம் நெஞ்சமிரங்கா
ம லடியெனவே, வடிவாளரசும ஹுரைத்தபோதில் மனங்கொண் டோ
ருமித்தோ ரடியடித்தான். (௱௮௯)

அடித்தபொழுதினி லபூஷகமா வரும்பொன் னிறம்போன்ற மே
னியெல்லாந், துடித்திட்ட டுக்கமின் றவர்கள்மேலே சோரிதெறித்திடச்
சோர்ந்துவிழ்ந்து, படித்ததிருவேத விளக்கேயிந்தப் பாரிலெளியே
ன்மேற் பாரமேக, பிடித்தயிடிபோல்நின் றடிக்குமடி யெம்மாத்திர
மோது மெனவுரைத்தார். (௱௯௰)

அரவிறுரைகேட்கும் புகழுடையோ ராதிமுகம்மது நபிக்கிறங்
கும், வரிசைப்புறக்கானே யோதிப்பாராய் மகனேயெனவேந்த ருரை
த்திடவே, தருவினிகர்பாவா யெளியேனுடற் றனிலோரடிபடத் தனை
மறந்து, விசகமதியெல்லா மிழந்தேனென விண்டாரரசர்பின் விளம்ப
லுற்றார். (௱௯௧)

ஞாலந்தனிற்சறு வருக்திறைா நாளைங்கெடுத்துநா றடியடி
யென், றேலமறைதனி லரியநாய லுரைத்தானெனக்கூற வுரைமறந்
தே, யேலந்தரும்வேத வாய்மையோரோ யிறசூல்முகம்மது மாதுலரோ,
பாலனடிநூறும் பொறுக்கமாட்டேன் புடியின்மவுத்தாவே னெனமொ
ழிந்தார். (௱௯௨)

மகனேபுவிமீதி லதாபுபட்டு மவுத்தாய்முடிந்தீரா லாகிறத்திற், க
கனேர்பணிந்தேத்தும் சுவனமீதிற் கால்பேன் அடிதனக் கிணங்காதி
டிற், ஜகனமெனுநெருப் பதுதனிலே தாழ்விரொனச்சொல்லத் தரும
நெறி, யகல்நேர்தரித்திடு மபூஷகமா அடிப்பீர்மனம்பொறுத் திருப்
பேனென்றார். (௱௯௩)

இருப்பேனடியுமென் றுரைத்தபோதங் கேந்தலபூலகு தனையே
வினர், பொருப்பாமெனும்புய லிடிக்குநிகர் போலேமறுக்காதோ ரடி
யடித்தான், தருப்போலருள்கரத் தபூஷகமா தன்மேனியிலுள் தொ
லியானதோ, நுரிப்பாயுரிந்திருந் தவர்கள்மேலே யுதிரந்தெறித்தொலி
த் தோடியதே. (௱௯௪)

சேரிசபையெல்லாந் தெறித்திட்டவே சோர்ந்துவிழுந்திடும் பாலு
சனை, மாரியெனுங்கொடைக் கரத்துமறு மறுத்துமடியென வுரைத்த
னன்று, பாரிலிரக்கமில் லாதிருக்கும் ஹையபூலகைக் தடியடித்தா

ன், வேரிகமழ்மேனி நெருப்பிலிட்டு வெந்துவறழ்ந்தாப்போல் வீழ்ந்தனரே. (௱௯௫)

வீழ்ந்துமறுத்தெழுந் துரைத்திடுவார் வேதவிளக்கேயென் றிருத்தாதையே, காந்தும்நெருப்பிலிட் டெரித்தனபோற காயமடங்கலும் வேகுதென்றார், சாந்துசெறிந்திடும் புயனேயுன்றன் தாதையுடலாறம் மனமும்வெந்து, தீய்ந்துருகுதென் றபூலகபைச் சினங்கொண்டடியெனச் செப்பினரே. (௱௯௬)

சிங்கமெனும்வேந்த ருரைத்தபோது சினங்கொண்டவன்பத்து அடியடித்தான், மங்குல்தனிலிருந் திடிவிழுந்து வன்னிதனில்வெந்த வராுபோலே, அங்கந்தனிலுள்ள தொலியதெல்லா மகன்றுநரம்புகளறுந்துவிழ்ந்த, பங்கந்தனைக்கண்டே வானவர்கள் படைத்தோனளவினி லுரைப்பதானர். (௱௯௭)

எங்கள்தனைப்படைத் தாளுகின்ற ஏகபெரியோனே யிணையில்லானே, வங்கமுறும்வாரிப் புவனம்போற்று மதினகர்வேந்தர் வரத்தால்வந்த, திங்களெனும்பாலர் படும்வருத்தந் தெரிந்துபுவியினில் தீரேனொல்லா, மங்கமனைஸ்வங்கமானுறென்றார் ஆதிபெரியவனருள்வதானுன்.

ஏவல்தனைமாறு விண்மயோர்களேயெவருமழியாம லிருக்கவல்ல, காவல்கருமென்றன் றிருப்பேரிலே காதலதுகொள்ளக் கடவதல்லால், ஆவலுறவாழ மனைவிமக்க ளவனிப்பொருள்மீதி லாசையெல்லாம், பாவில்இறைலுக் கிறக்கிவைத்தேன் பதறப்பறித்தெறிந் திடுவேனென்றே. (௱௯௯)

செஞ்சொல்மறையேவல் தவிராமலே தேயமுழுதினு மொருகுடையில், வஞ்சமறஆளு முமறுகத்தாப் மகன்மேலடங்காத வாஞ்சையினும், நஞ்சமகன்மீதிற் பேராசையோ சுருதிப்பொருளென்மேற் றேற்றமேதோ, கஞ்சமலர்ப்புயன் கருத்ததனைக் காணும்படிவிட்டேன் கற்பனையே. (௨௱)

எழுதுமுறைதப்ப முடியாதென்ன விதயந்தனிலெண்ணி லெனதுபேரில், முழுதும்பிரியங்கொண் டிருந்ததனல் முயலுந்தவத்தினல் வரும்பாலன்மேற், பழுதுவரும்கத்து விதித்ததற்காய்ப் படுத்தும்வருத்தம்பார்த் தறிந்தேவினைத், தொழுதவப்பேறுக் குரியதொருதுய்யோன்றிருவுள மாயினனே, (௨௱க)

உமறுக்கெனியல்லால் ஆகிறத்தி லுவப்பொன்றிலேக்கசம்மஉ ராசையினுற், கமருற்றிடுநேமி தனிலவர்தங் கல்புதனைச்சோதித் தறிகவென்னச், சமருக்கரியேறும் அமூஷகமா தனக்குபலாய்விட்டுச் சோ

தித்ததால், அமரர்திரளோரே யுமறுகினை வறிந்தேனெனவல்லோ னரு ளினனே. (௨௱௨)

நம்புமடியார்கள் பிழைபொறுக்கு நாயனிலைகூற நலம்பெருகு ம், உம்பரனேவோரு மறுமொழிக ளொன்றாமுறையாம லினிதிருந்தா ர், அம்புதருங்கண்ணார் மடலெழுது மழகாதபூஷக மாவடியாம், கொ ம்புமலர்பறித் தெரியிலிட்ட கொள்கையெனத்தாதை யுடன்கூறுவார்.

பாவாவெளியேனை யடியாமலே மனதுபொறுத்தீரால் மதினம்வி ட்டுத், தீவாந்தரமான தேயமெல்லாஞ் சென்றுபிழைப்பேனென் று ரைத்திடவே, கோவாகியவள்ளா லுரைப்பாரென்மன் குலத்திற்கருமரு ந் தெனுமகனே, ஆவாவுரைப்படி முடியுமட்டும் அடிப்பேனெனப்பி ன்னும் பகர்வதானார். (௨௱௪)

அடிக்குங்கணக்கெல்லா மடித்துமுடிந் தாலியுமக்குண்டா யிரு க்குமாகில், மடிக்கண்டுருவிழ்ந்த நபியிறசூல் தறுகாமதீனத்தி லிருந் தாலுமாம், வெடிக்குமலர்ச்சோலைமதீனநகர் விட்டுமறுதேயத் தாகிலு மாம், வடிக்குமறையேவல் தனைத்தவிர்த்தோர் மாறுபொருந்திடேன டிம்பாயென்றார். (௨௱௫)

சொன்னாருலகு பதினெண்ணடி சோராதடித்தபோ தபூஷகமா, த ன்னுலடங்காத வருத்தமுடன் தண்ணீர்த்தவனமும் தனைவருத்தத், தென்னார்திருமேனி நிலம்புரளச் சிந்தைகலங்கிமீள் விழுந்திருந்து, வொன்னார்க்கசனியே றனையபாவா வொருவாய்ப்புனலென் கருளு மென்றார். (௨௱௬)

பாணிதரவேண்டு மெனவுரைத்த பாலர்தமைநோக்கிப் பார்தள க்கோ, ராணித்தரளமா முமறுகத்தாபருள்வரவனியி லருந்தவக்கள், பேணிப்பிழையாமற் கொடும்பிழைகள் பிந்தாதுளைத்திடு மாந்தரெல் லாஞ், சேணிலமரோர்க ளதாபுசெய்யுந் தீயாம்நரகத்திற் புகுவரெ ன்றே. (௨௱௭)

நரகம்புகுந்தோர்கள் தவனத்தாலே நாவுலறழ்ந்துடல் கருகும் போது, வுரகமுமிழ்ந்திடும் விடங்களுடன் ஊனமொலித்தோடுஞ் சோரிதன்னைக், கரகந்தனிலெடுத் தவர்கள்முன்னே காண்பித்திடுவார் கள் காதலாகித், தரவென்றதைவாங்கிப் பருகமுகத் தசைகள்களன்ற வை தனில்விழுமே. (௨௱௮)

மறுத்துமவரந்தத் தவனத்தாலே வானந்தனைப்பார்க்க மேகம் போலே, கறுத்துத்தலைக்குமேற் றோற்றுமது கண்டோர்மனங்களி கொண்டாடியே, பொறுத்துமுடியாத தவனமெல்லாம் போகுமழைத்

தண்ணீர் புசிப்போமென்னத், திறத்தினுடன்பேசும் வேளையிலே சிவந்துமழைநீயாய்ச் சொரிந்திடுமே. (௨௱௯)

நீயால்மழைபெய்யும் பொழுதிலவர் நினைத்துத்தவலமுந் தீராமலே, வோயாநரகத்திற் கிடப்பரென்ன வுரைத்துமகனேயா னுமக்கிரங்கி, வாயாலருந்திடும் புனல்தந்தேனும் மறுமைதனிற்றுகம் தீராதென்றே, சாயாப்படைவேந்த ரபூலஹபே தாங்காதடியப்பையென் றேவினரோ. (௨௱௰)

எவும்பொழுதினி லிருபதடி யிரங்காதடித்தவன் அபூஷகமா, நாவுதடுமாறி மேனியெல்லாம் நைந்துவிழுந்துபின் னெழுந்துசொல்வார், பாவலவர்போற்றும் பாவாசந்நே யையவடிக்கச்சொன் னெனவுரைக்கக், காவென்றருள்வேந்தர் மகனேயென்றன் கருத்தேயெனப்போற்றிக் கவல்வதானார். (௨௱௰௧)

அங்கிரகவா திகளாகினே ரநேகநெடுங்கால மதாபுபட்டு, மங்கிநிறங்குலேந் தாண்டவனே வருத்தந்தனைச்சற்றே மாற்றியெங்கள், மங்கிவிரங்காயென் றுரைத்திவர்பலனே தவர்கள்முன்படுவினையாற், நிங்களெனும்பாலவிரங்கேனெனத்திருவாய்மொழிந்தடி யெனவுரைத்தார்.

வரிசைத்துணைராஜ னுரைத்தளவில் மறுத்துமிருபத்தைந் தடியடித்தான், குருச்சொற்றவிராத பாவாதன்னைக் கூப்பிட்டொருமொழி கூறலுற்றார், கரிசக்குடியோர்கட் கரியேயும்மைக் கட்டித்தழுவிக்கல் குளிர்ந்திடவே, பிரிசத்துடனென்னை முடுகிவாரு மென்றார்புவிவேந்தர் பேசலுற்றார். (௨௱௰௩)

ஆசைமகனேயென் கண்மணியே யருமையுடன்கட்டித் தழுவிநிதம், பாசமுடனன்றாப் வளர்த்தேனிப்போ படிமேலடியெல்லா முடிந்ததற்பின், னேசமுடனுன்மே லாதரவாய் நெறியின்வளர்ப்பேனென் றருளிப்பின்னர், வீசென்றபூலமோ டுரைத்திடவே விரைந்தங்கவன்முப்ப தடியடித்தான். (௨௱௰௪)

அரக்குநிகரராக விழிசிவப்புற் றபூலகடித்திடு மடியினாலே, வரைக்குநிகர்ப்புய ரபூஷகமா பாவாதனைப்பார்த்து மகனரிவி, லிரக்கம்பிரிந்தீரோ வெனவுரைக்க வுரைப்பார்மகனேயா னுனக்கிரங்கி, லுரக்குங்கியாமத்தி லதாபெனமீள் டுரைத்தங்கடிப்பாயென் றோதினரோ. ()

சொன்னாரவனைம்ப தடியடித்தான் சோர்ந்துநிலத்தில்விழுந் தெழுந்துசொல்வார், மன்னாவிடுமெனைப் பயந்தெடுத்த மாதாதிருப்பாதந் தனைத்தெரிசித், தென்னாவிபோகும் வருத்தமெல்லா மியம்பிவருவேனென் றுரைத்திடவே, பொன்னாட்பதியுடன் பூலோகமும் புகழ்வேந்துமதிநா புகல்வதானார். (௨௱௰௬)

கன்ஞலழுத்தோங்கு மதிபோலெங்கள் கருத்திலிருள்நீக்க வரும்பாலனே, யெங்கள்குடிக்கெல்லா மருமருந்தே யிறையோன்மறைதனிலிருந்தவன்னம், பங்கமுறுமங்கத்து முடிந்ததற்பின் பரிவினுனைதன்னை யிடத்தினிற்போய்த், துங்கமுடன்சலா மொழிவாயென்னச் சொல்லிமலர்வாயின் டமூதனமோ. (உ௱௰௭)

மகுடமுடிவேந்தருமறுகத்தாப் வாய்விட்டழும்போது மறையுதுமான், விகடமுறுங்காபிர் சிரமுருள விசும்படைவேந்த ரசியுல்லாவு, மகடமிவர்தமக் குறுமோவென்ன வழுதாரழுதயோ தமரோர்களுஞ், சகடமென்சுழ் வணாந்திருந்த ஜனங்களனைவோரு மழுவதானார்.

விலங்கும்பறவையுங் கடல்மலையும் வெய்யோன்மதிவானு மேதினியுங், கலங்கும்படியழு திரங்குமது கஸ்டவயமேவந்தர் கருத்தடங்கித், துலங்குந்திருமேனி யுருக்குலைந்து சோர்ந்துகிடந்திடும் பாலகனைப், பெலங்கொண்டடியென வுரைத்தபோது பிந்தாதவன்ஐம்ப தடியடித்தான். (உ௱௰௯)

ஐம்பதடிவிழும்போதுகல்ல அழகாரபூஷகமாவுடலங், குப்பியவலிபெட் டெரித்ததுபோற் குழைந்துநிலத்தில்வீழ்ந் தெழுந்தரிய, தம்பமாகிய பாவாவேயென் னைக்குமவுத்துவந் தடுத்ததிப்போ, திப்பர்துனைவிட்டுப் பயணமாவே னென்றன்சலாமுமக் கெனவிசைத்தார். ()

பாலரிவைகூறக் கேட்டுமறு பகர்வாரொதுகல் மணிமகனே, காலனுமதாவி வாங்கியேகுங் காலேதனில்கந்தம் கபிருறுங், ஆலகிதம்யைத் தெரிசித்திரோ லருமையுடனென்றன் சலாமருளிக், கோகுமலர்ங் பாதங் காணமையல் கொண்டேனெனச்சொல்லு மெனக்கூறினார். ()

மவுலிமறுமறை கேட்டுப்பாலர் பாவாசுபியுட ஹுரைப்பேனெனப், புகழுங்கோசம் உமறுமனம் புழுங்கியழுதகக் கனிலடக்கி, அபுலகெஐம்பதுல் நனோக்கியே யடியென்றுரைத்தன ரைம்பதடி, சவிகொண்டடித்தன ரைம்பதும் பொருமற் றனையின்கிழுந்தெழுங் குமாரபதானார்.

ஏகனயியுல்லா தொழமாரே யிறையவனருட்சேரு மசுகாபிகாள், போகந்துனியானி னைவிட்டுப் போறேன்புனிதி உமதனவில், ஆகந்தமொழி யெளியேன்மனை மறியாமற்செய்யுங் குறைகதுநன்டேல், மாகம்படைத்தவோ ரிறைக்காகவே மனதுபொறுப்பீர்க ளெனவுரைத்தார். (உ௨௧)

அகிலம்புகழ்பால ருரைத்தல்கேட்டங் கவர்களுமதீன்ற வரும்பாலரே, சகலபேர்க்குமோர் குறைகள்செய்யாத் தருவேவெளியோர்கண்தாபரமே, இகலுங்குபிரோர்கட்கரியேயெங்கட் கிருகண்மணியெனு

பிளவரசே, புகலுமொருகுறை நீயொன்கட்குரும் புரிந்ததிலையென்றங் க
ரசைநோக்கி. (௨௨௪)

கடற்பாரிடமெல்லாம் புரக்கவருங் கருணைக்குரிசிலே யுமதுபா
லர், படப்பாதகமான வடிகளெல்லாம் பட்டாரினமடி படுவதற்கே, யு
டற்பாலிடமில்லை திருமறையி லுக்கடாமடியெல்லா மெனியேன்மனைத்,
திடப்பரலடிப்பிரொன் றுரைத்திடவே செங்கோலரசுமனுனைக்கனுற்றூர்.

பருதிமதிவானம் புவிகளெல்லாம் படைத்தாளிறையவன் வேத
த்திலே, யொருவன்பிழைசெய்தா லொருவனதம் குத்தாரஞ்செய்வ
துன்டோசல்ல, நிருபரசுகாபி மாரோகீங்கள் நிகழ்த்தாதிருங்களென்
றியம்பிப்பின்னர், சுருதிதவிராதா ரடியெனவே சொன்னுறொழுமதா ம
டியடித்தான். (௨௨௬)

நாங்காதெழுபதா மடிதனிலே தருமக்குணப்பாலர் தசைகளெ
ல்லாம், தேங்காய்தெறித்திடும் பரிசுபோலச் சின்னஞ்சினமாகத் தெ
றித்துவிழப், போங்காலீதெனை மயந்தபாவா புதியோன்றனக்காக
வெளியேன்செய்த, தீங்கானதுபொறுத் தருள்வீரென்னச்செங்கோலர
சும றுரைப்பதானார். (௨௨௭)

மாற்றுயர்ந்திடுங் கனகமேயென் மனதின்றுயர்தீர்த்த மாணிக்
கமே, பார்த்தார்பசிதீர்க்குங் கனியேயுன்னைப் படிமேலடியாம விருக்
தேனெனிற், றீத்தாவியபொல்லா நரகத்திலே தியங்கிக்கிடப்பாயே
யென்றுருகி, யாற்றலுடையபோர்க் கலனுமறங் கடியென்றபூலகோட
ருளினரே. (௨௨௮)

ஆதியருட்மீதின் மாறுலர்தா மருளும்பொழுதெல்ப தடியடித்
தான், சோதிப்பிரகாச மேனியெல்லாஞ் சோர்ந்துபடபடென் றுடல்
துடித்து,மேதினிக்கணிலினைவழிந்து வீழ்ந்துபதையாமற் கிடந்தனர்
கள், டோதுமறைதேரு மறிஞரெல்லா மோயாதிரங்கின் றழுதனரே.

தன்னைமறந்தாரென் றழுதமாற்றங் தாயானவர்கேட்டுத் தாமரைப்
பூம், பொன்னைநிகர்மேனிக் குருகிமனம் புழுங்கிநிலத்திநினி லறைந்து
வீழ்ந்து, பின்னர்நெடுநேர முணர்வில்லாமற் பின்புநினைவுவந் தெழுந்
திருந்தே, அன்னைதனைக்காணு தேகவென்றே வன்பாய்வளர்த்தேதனு
ணைவழுதார். (௨௩௰)

நாவிகமழ்ந்திடு மேனியெல்லாம் நையநிலம்புரள டழுமநோர
ம், ஆவிபுடன்பால ரொழுந்திருந்தா ராமென்றுனைகேட்டன் காவலுட
ன், காவிமலர்போன்ற நேத்திரத்தார் கபிபுழுகம்மதா தேவியாளைக்,
கூவியெனக்காக வொருமன்றுட்டுக் கோமானுடன்கேள்மென் றது
கூறுவார். (௨௩௧)

அச்சமுடன்றிருப் பாலகர்மே லடித்துமுடிந்தவவ் வடியல்லா
ல், மிச்சமிருக்கின்ற வடியொன்றென்றிற் கோதுமினைமவனுக் காகவொ
ரு, ஹஜ்ஜ-ம்உட்ருவு மிருயதுகிபான் காசுமருள்நோன்பு நாற்பதுவும்,
இச்சையுடனிந்தக்கணக்கின்படிக் கேவைரசர்முன்னியம்புமென்றார்.

இயம்புமெனச்சொன்ன வார்த்தைகேட்டே யிறசூல்முகம்மதுதி
ருத்தேவியார், நயம்புலனியந்தேருங் கருத்துடைய நாரியிருபேர்க
ள் தமையனுப்ப, வியன்பண்ணையீமாறுத் திருநகரம் வீதிகடந்து
சென் றாதரவாய்ப், புயங்கள்முடிமீதிற் றரித்தலோகம் புரக்குமரசர்
முன் னுணாய்பதானர். (௨௩௩)

மகராலயஞ்சூழ்ந்த புவியிடத்தில் அடிவுயகுறைப்பாடு மறைநெ
றியு, நிகராவொருதருங் காணெணைக் கதை மீதிக்குமரன்மே லாதரவாய்
ச், ஜெகராசர்கள்போற்றுமரசர்திருத்தேவியுரைத்திடுமாற்றமெல்லாம்,
யகராமுனம்வேந்த ருமமுகத்தா பரிவாய்ப்பார்த்தெதிர் பகரலுற்றார்.()

துங்கமுறும்பாலன் றனக்கிரங்கிச் சொல்லுமதம்கியான் யாத்திர
மல்லவோ, திங்களொளிவீசும் புகழுடைய செல்வர்திருத்தாய்போல்
தாருயிரம், பங்குபிரியங்களுண்டெனக்குப் பகருமகன்மீதிற் பகைக
ளுண்டோ, மங்குல்சூழ்வேந்தர் திருத்தேவியா ரதிர்துமிவைசொல்
லி வரவிடுத்தார். (௨௩௫)

நல்லதவர்கூறுங் காரியத்தில் நாலுமுடன்றைதயா யிருக்கவென்று
ஸ், வல்லபுகழ்நாயன் கைக்கூலிக்கு மனதுபொருந்தானிம் மாற்றமெ
ல்லாம், அல்லிகர்கடந்தல் மனைவியார்க்கும் ஆலநபிதிருத் தேவியார்க்
குஞ், சொல்லென்றனுப்பிவிட் டடியெனவே சொன்னானவன்தொன்
னூ றடியடித்தான். (௨௩௬)

தொன்னூறடிவீழும் போதுடலந் துடித்துப்பதையாமற் றுணு
க்கில்லாமற், றன்னூர்மலர்மேனித் தடிகளெல்லாஞ் சாட்டையடிகனி
லொட்டித் தசையின்விழ்ந்து, புண்ணாமெனக்கனார் துருகியோடிப்
போவதறிந்திருந் தடியெனவே, நன்னூர்தொழும்பதத் தரசர்கூற ந
லக்கந்தவிராம லடித்தனனே. (௨௩௭)

விசும்பயித்திப்பத் தடியினாலே மேனிவடிந்துவெள் ளெண்புதோ
ற்றப், பாசமிகுசூல்தந் தோழமரோ பாரிலெளியேன்இன் றெடுக்கமா
னேன், வாசம்நிலையான கியாமத்துநாள் வருமட்டுமைவிட்டு மறைந்
தேனெனப், பேசுந்திருமணிவாய்மூடினார் பேராமரசேங்கியழுதனரே.

அசசர்க்காசான வுமறுகத்தா பவயக்குரலாக வழுமப்போது, வ
ரிசைத்திருவேதம் கோவைசெய்யும் வள்ளலுதுமானும்அலிப்புலியும்,

விளைசெய்புயவேந்த ரசனுஞ்சனும் விதல்சேர்நபிதோழ மாரெல்லோ
ருந், திரைசெய்கடலார்க்கும் பரிசுபோலே சிந்தாகுலம்பெருத் தழு
வதானூர். (உ௫௯)

மதினந்தனிலான்பெண் ணனைவோர்களும் வாய்விட்டிரைந்தை
யோ கோவெனவே, வீதனம்பெரிதாக வழுதாரங்கு வேதன்அலியெ
ழுந்து மறுகத்தாப், சுதனென்றுலகெல்லாம் புகழ்உடக்குங் குன்கமன
த்தினு சஷூக்கமா, வதனந்தனைப்பார்க்க நிறைந்துசிவல் கண்டாரகமிக
மகிழ்ந்தனரே. (உ௬௰)

சிவனுடன்பாலரிருந்தாரெனுஞ் செய்திதனையறிந்தசுகாபிமார், ஆ
வனுடன்மனப்பிடையெல்லாமகன்றுதினிமேலேநடியெனவே, பாவினி
சைசாரக மெழுந்தோதிய பாலர்பிழைத்தாரென் றுவகையென்னும், வா
விதனிற்குளித் திருக்குநேசம் வல்லோன்அலியுல்லா மகிழ்வதானூர். ()

எங்களிருகல்பனை விளவாசே யினிமேல்மனஞ்சலித் திருக்க
வேண்டாம், பொங்குபுவிமீதிற் கடங்கள் தீர்த்து போச்சின்றுமக்கா
தி புகழுண்டாகச், சங்கையுடனுகந் திடபிடியாய்த் தழைத்திட்டிருப்
பிரென் றுரைத்தாரப்போ, செங்கைதனைத்திரு முகமேல்வைத்துச்
செங்கோலரசும நழுதனரே. (உ௬௨)

மன்னரிரங்கியே யழுகவங்கு மதியாரசுகாபி மார்களெல்லா, மெ
ன்னவகைபால ராவியுட னிருந்தாரெனமன மகிழ்ந்திராமற், றன்னில
ழுதாரென் றவரவரோ சாற்றவவருட சலிப்பைநீக்கிப், பொன்னென்
றுளிர்பால ரிருகரமும் பிடியென்றழலகோ டுரைத்தனரே. (உ௬௩)

கன்னலெனும்வேத வாசகத்தார் கையைப்பிடியென வரசர்கோ
மான், சொன்னபொழுதினி லபிப்புலியார் சொல்வாரரசர்கள் கேசரி
யே, தன்னைநிகரில்லா னருளும்வேதந் தன்னிலுளபடி தீர்த்துவிட்டீர்,
இன்னங்குறையேது புகலீரென்ன வேந்தலொருமாற்றமியம்பலுற்றார்.

ஒங்கலுருகவே கடல்சுவற வொன்றுர்புரிசைக ளுதிர்ந்துவிழ, வா
க்குமொழிந்திடும் அலியுல்லாவே வல்லோன்மறைதனி லிருந்தவண்
ணந், தீங்குவருத்திடும் சனுவின்சுக்கும் செய்தெனெருருக்குஞ் செ
ய்யவேண்டும், ஈங்குவினையான மறுவுண்டதற் கெல்லனைத்தடிகொள்
வே னெனக்கூறினூர். (உ௬௫)

கன்னுகண்டதற்கின்ன மழபுலன்டனைக் காவலர்கூறக் கருத்தழிந்
து, புன்னொன் றுயர்பரிக் கதிபரலி புதியோன்விதிபோலென் றயர்ந்து
விட்டார், வன்னவெலுங்கொடை யுதுமாறுமெய் மறந்துபரதவித் த
ழுவதானூர், எல்லெலனுகாத அசுகாட்மா ரிளைத்தார்கடலார்க்குந் த
னகமையொத்தே. (உ௬௬)

ஐயோதிருப்பாலர் தாதடிக்கு மாலிபிறைத்தாரென் றிமிழ்ந்தோர், ஐய்யோன்வரவிட்ட சோதனையோ சுருதிப்பொருள்தனந் தேற்றதுவோ, மெய்யார்வாள்பிடிக் குங்குரிசில் நீநிக்கிறுபோதும் போதமென, மையார்கடற்சூழ்ந்த பூமிபோற்று மதிறுடைவடக்கலும் பரதவித்தார். (௨௪௭)

செய்யமதீனமா நகரிலுள்ள தெரிவைமட வாருஞ் சிறியோர்களு, மையென்றிருள்மனக் காபிர்களு மனதுகலங்கிநின் றழுதார்கள்பட, ஐயமறவைய கலுவோர்களு மமரர்பறவைக ளூர்வனயும், வையுமனதுடன் கியாமத்துநாள் நடுக்கமதுபோல நடுங்கியதே. (௨௪௮)

நடுக்கம்பெரிதாக வழுமந்நேரம் நடத்துநெறிநீதக் குரிசிலுட, னிடுக்கமுறுமேனித் தொலிகளெல்லாம் இடியாமடியினு லிரிந்துபோய்நேர், தொடுக்குநரம்பெல்லா மறுந்தும்போய்நற் சோரிதனாமீறல் வடிந்தோடவே, வொடுக்கந்தசையெல்லாங் கரன்றுபோச்சென் றுறுதிபெறம்பால ருரைக்கலுற்றார். (௨௪௯)

ஊடுறுந்றநீமெனும் பெயருடைய கத்தாபொறுமையுங் கொடையுமுள்ளோன், சமூதிலுடனெனக் கிரக்கினீரோற் றனியோனுமதரு ளிரக்கமாவான், நவறுபொறுத்தெனக் கொருமன்றூட்டித் தந்தாலுமக்காறிகொடைதருவா, னுவறுத்தலத்தன்னை நபிதமக்கி லோகர்தனின்முத ன்றக்கினனே. (௨௫௰)

இந்தவகைபாலருரைத்திடவே யேகனபிதோழருமறுகத்தாப், மைந்தரொளவந்த நவமணியே வல்லபொருளேவும் வழிநடந்தாற், சிந்தையிரக்கமு மருட்கொடையுஞ் செய்வான்நடவாதார் திநரகில், வெந்துவிடுவார்கா ணிரக்கமெல்லா மேலோன்பரமெனவிளம்பலுற்றார். ()

இரக்கம்பொறுமையேக னிடமல்லாம லெனக்குத்தருமோவென்றியம்பிப்பின்னர், நரர்க்குங்ககனோர்க்கும் பிரியமான நாட்டமுறும்பாலர் தமைப்பிடித்தே, யுரக்கும்பெரும்பாவந் தரித்தமறு வுண்டோர்தனைக்கத்துக் கொள்ளுவதேன், திருக்குமிடக்கனிற் கொடுபோவென்றன் கேந்தல்அபூலகு தனையேவினா. (௨௫௨)

ஏந்தலுரைத்தபோ தபூலகென்போ னிளவல்திருக்கரந் தனைப்பிடித்தே, சேர்ந்தமதீனமா நகரிலுள்ளோர் சிவன்றனைப்பிடித் தேகுமவாறுய்ச், சோர்ந்துபதவித் தழுகமனக் துணிந்துநடந்துசென் றவ்விடத்திற், சாய்ந்தென்றெனிர்மேனிப் பூழ்திதோயக் கிடத்தமனமோடித் தளம்பினனே. (௨௫௩)

தளம்பும் அபூலகு தன்னைக்கவித் தங்காதடியென ஆரசர்கோமான், விளம்பும்பொழுதினின் மனநோகி விடாமலொருபத்து அடிய

...டித்த[illegible] பழம்புண்ட னீர்க்காய்ந்த நாராசம்போய்ப் பாய்ந்ததனைத்திடும் பரிசுபோலே, புளம்புண்ணதிற்காயம் பொறுக்காமலே பொருசொல்லரசருக் குரைப்பதானார். (௨௫௪)

வாரம்பிரியாத திருத்தாயைதயே மைந்தனிதயதா மரைகருகி, யீரந்மனிற்காய்ந்தே நெரிப்பதுபோ லெரியிதமாம லெளியனுவி, பூரந்தெறுக்காலின் விஷங்கள்போலே பொருதுகடுப்பாகக் கடுக்குதேயா, வாரமணிப்பால னினிதுகூற அன்னையுமமப்போ தருள்வதானார். ()

வேண்டுமதுவென்னக் குருனுயத்தில் விளங்குஞ்செயல்செய்தகருமத்திற்காய், ஆண்டோன்வரவிட்டா ஞெமத்தில் அதாபென்றரசர்கோ வழுதழுது, தாண்டாமணிவிளக் கனையபாலன் றன்பந்தனைக்கேங்கித் துயராழியிற், ருண்டார்களைதெரிந் தினியமாற்றந் தருமக்குமரனுக் குரைப்பதானார். (௨௫௬)

அடிக்கும்அடியெல்லாம் பொறுத்திருந்த அருமைக்குமரனே யமரோருக்கும், படிக்குஞ்சிறப்பான புகழ்தரித்த பரிவேயெளியோர்க்கும் பாற்குடமே, வெடிக்குமலர்மேனி வருத்தமெல்லாம் விட்டுசுவாத்தியம் பெறுவீரொரு, நொடிக்குளெனக்கூறிப் பாலகனை நோக்கியொருமாற்றம் நுவலலுற்றார். (௨௫௭)

எந்தன்மனமுனக் கிரங்காமலென் னிதயம்பெலமாக்கி யியல்மறையின், வந்தபடிசெய்யப் பொருத்தமாக்கும் வல்லோன்றனக்கெல்லாப் புகழ்ச்சியுமே, அந்தமுடன்சுக்கு றருளியென்ற னாசைமகனேநல்லாணிமுத்தே, சிந்தைதனிலுள்ள பீடையெல்லாந் தீர்த்துவிடுவீரென் றோதினரோ. (௨௫௮)

பின்னுமருளுவா ருமதளவிற் பேராயிரமுள்ள நாயனானே, அன்னமுஹம்மது நபிமருளானை துனியாவுக் கிரங்கவில்லை, மன்னுமிரக்கங்ளாகிறத்தில் வருத்தந்தனக்கென்கும் பொருத்தமல்லாம், புன்னுமறைதேருமதியேயெனப் பரிவின்மறுமொழி பகரலுற்றார். (௨௫௯)

அரியகியாமத்து நாளிலுள்ள அதாபிலமுழுந்தாம லிருவரையும், உரியசுவாத்தியமாக்கிவைத்த வுடையோன்றனக்கெல்லாப் புகழுமென்ன, வரிகொள்மலர்மார்ப ரிடைவிடாமல் மகனேகலிமாவை மவுலுமென்றார், விரியும்புகழாளர் சுக்கூறுசெய்து மேலோன்கலிமாவை விளம்பினரோ. (௨௬௰)

தக்ககலிமாவைப் புகலுநேரந் தனியோனமரோர்கள் தனைக்கூவியே, மக்கநகர்வாழுந் தலைமையுள்ள வள்ளலுமறுகண் மணியாமென்னத், திக்கிலுளபேர்கள் புகழ்ந்தேத்திய செல்வராபூஷக மாபேரிலே, துக்கமிகவான சோதனையைத் தூரத்திவிட்டேனெனச் சொல்லதானான்.

விட்டகலாவுக்கு மனம்பொருந்தும் விதமுமனையேவல் விரும்பி
யவர், பட்டிவருந்தமுஞ் சுக்குறுசெய்த பரிசுஞ்விழியாலே பாரீரின்
ணம், நட்டமுறும்பேர்க்கு நலமருள்வோ ருனையெனதருள் றருமை
த்தாணே, யிட்டமுடனவ சிருபேருக்கு மீந்தேன்சுவனமும் றருமத்
துமே. (௨௬௨)

இனிமேலொருபோது மெனதடியான் றருமத்துமறுமேற் கோ
பமில்லேன், துனியாத்தனிலவர் மகன்விளைத்த தோசமடங்கலும்
பொறுத்தேனெனக், கனியாகியநாய னுரைப்பக்கேட்டுக் ககனோரட
ங்கலுங் கருணைகூர்ந்து, நனியாம்புதுமைகொள் டிருந்தாரிப்பால் ந
ன்றியுமறிது நவில்வதானார். (௨௬௩)

செப்பும்பத்தடி போகமற்றுத் திறமாரடியெல்லா மடியெனவே,
தெய்பமனதுகொள் டொருவைந்தடி செங்கைபொறுக்கவே யடித்து
நின்றான், துப்பைநிகர்மேனி அபூஷகமா துய்யதகப்பனார் தமைவிளி
த்துத், தப்பென்றுரையாதான் மனம்சாலுந் தண்ணீர்குளிர்ந்தாப்போ
லிருக்குதென்றார். (௨௬௪)

நாவுதனிலொரு குளிர்ச்சியான ருசுத்துடம்பெல்லாம் பூரிக்கு
தென், றுவல்சுவாத்தியந் தனைத்தேடிய தடங்கிற்றெனதுமே லடிகளை
பட்டுத், தாவும்வருத்தமுன் காணேனென்றவன் றாதையெனவரு மாச
லென்னக், கூவுங்குயில்போன்ற ராகமுள்ள குமாருரைத்தபின் கூற
லுற்றார். (௨௬௫)

எல்லைப்புகழ்ச்சியு முடையதொரு வேகனருளிய ருசுத்தாகும்,
பொல்லாங்கெனும்பாவ மடங்கலேயும் பொறுத்தானழியாத பொன்னூ
ரிலே, சொல்லாலடங்காத வரிசைகளுஞ் சுகமுந்தறஜாத்துத் துனைவி
ல்லாத, நல்லானருட்செய்தா னவன்புகழை நாவிற்றவறாமல் நவிலு
மென்றார். (௨௬௬)

நவிலும்ப்ரயோசன மானபேறு நாதன்புவிமீதி லிருந்தாலுமாம்
கவலுமவுத்தெனும் பெரியகடன் கழித்துப்பரலோகங் கண்டாலுமா,
மவுலுப்பெருவாழ்வு தருவானென்ன வரிசைநெறிசேரு முமறுகத்தா,
டபுலகெனுமவன் றன்னைநோக்கி யடியென்றுரைததபோதடித்தனனே.

பெறுகாரணவேந்த ருமறுகத்தா பேசுமுனாமறு தெழுந்துமனை,
ந், தறுகாதடித்தன னேனைந்தடி தன்னூற்றிருமேனி தானொடுங்கிச்,
சிறுகால்கரமொன்றும் உசுப்பில்லாமற் செப்புங்கலிமாவும் அயாம
லே, மறுகார்புவியாசை தனையொழித்து மறுமைப்பதிக்கெழுந் தரு
ளினரே. (௨௬௮)

விறுங்கருகியுந் தரித்தபாலர் மேலாம்பதிசொர்க்கத் தெழுந்தரு
ளும், வாறுதெரியாம லுமறுகத்தாப் மறையின்படியடி குறையுங்கொ
ளக், கூறுமொழிகேட்டு விழிகள்புனல் கொள்ளாதபூலகு கோவென
வே, தேறுமனைதெல்லாந் தரிகொள்ளாமற் றியங்கிப்பரதவித் தழுத
னனே. (௨௬௯)

புலம்பும்அபூலகு தன்னைநோக்கிப் புகல்வாருணக்குமுன் னும்ப
த்தோர்க்கும், நலம்புன்னரியம்பெறும் வரிசைகளும் நாயனருளுவா
ன் சலியாதென்றார், சிலம்புநிகரான புயத்தரசே, நிறைபுகழ்த்தேற்
றுந் திருப்பாலகர், தலம்பொன்னவிப்மான சுவனலோகந் தனக்குப்பய
னம்போய்ச் சேர்ந்தாரென்றான். (௨௭௰)

சார்ந்தார்சுவனத்தி லெனும்வாசகந் தன்னைச்செவிகேட்டுத் தனை
மறந்து, சோர்ந்தாருடனெல்லாம் படபடெனத் தடிந்தாருதுமாறும்
அலிப்புலியும், வார்ந்தாரெனக்கண்ணீருஞ் சிருந்த வட்டயத்திருமண ம
யங்கிவிழுந்தார், தீர்ந்தாரெனமோது மதீனமெல்லாஞ் சிந்தைதடுமாறிப்
புலம்பலுற்றார். (௨௭௧)

நீட்டுமறையோதுங் குரலோசையோ சிவந்தமுகம்வாக்கோ நீ
னெறியில், நாட்டமுறுமனைப் பூரணமோ நல்குங்கொடையோ ஞா
சிலுடையோ, தோட்டுமலர்வாச மனையதிருச் சொல்லோபுகழ்சொல்ல
த் தொலையாதெனக், கூட்டஞ்செறிவிதி மதீனமெல்லாங் கோதாரியா
கப் புலம்பியதே. (௨௭௨)

மூதிராமனவில்லா திமையோர்களு முகிலும்பறவையும் ஊர்வன
மும், சதிராகியதிசை மலைகடலுந் தரையிலுள்ளமரந்த ரனைவோர்களும்,
மதிசார்திருமுகப் பாலகனுர் மவுத்தாகியமாற்றந் தனையறிந்து, கதிரோ
னழல்விசு முடலுருகுங் கியாமத்தமளிபோ லானதுவே. (௨௭௩)

மாந்தாளேனோரும பல்படைப்பும் வருந்தழுதங்காலை மதிமறந்
து, சோர்ந்துவிழுந்திடு முமறுகத்தாப் துயர்தீர்ந்தெழுந்திருந் துணர்
ந்து, சாந்துமணம்வீசும் பாலகனைத் தாங்கியெடுத்தேந்தி மடிமே
ல்வைத்து, மோந்துமலர்வாயை முத்தமிட்டு முகத்தைமுகத்திலே வை
த் தழுதனரே. (௨௭௪)

நபிநூர்முகம்மது நபிதமைப்போல் நல்லமறையோது மார்க்க
மெங்கே, மஅனுவுரைசெய்யும் தறத்திடமெங்கே மதியையிகர்மேனி வ
டிவமெங்கே, வியனுலொருவருந் கியாமமட்டும் வேதமுழக்கம்போலே
விளம்பலெங்கே, ஜெயமாமுலகத்து மகமைபென்னச் செங்கோலரசு
மழுதனரே. (௨௭௫)

தாமமணிதிருப் புபத்தழகுஞ் சலசமலர்போன்ற முகத்தழகு,
மாமென்னுலகேற்றும் குரைத்தழகு மமுதக்கனிவாயி னழகுமகிழ்,
நாமங்கமழுமென்பிரகாசமுந் தோன்றுதகன்றீரோ சுதனேயுன்றம்,நா
மமொழிந்துபோய் விடுவோமுதல் நாயன்விதிதானோவெனவழுதார்.()

கண்ணின்மணியேநின் குலக்கொழுந்தே கல்புப்பழமேயென் ற
முதமின்னர், அண்ணல்மனந்தேறி யபூஸஹபே அடியெத்தனைமிச்ச
மிருக்குதென்றார், எண்ணுங்கணக்கினு லிருபதடி யிருக்குதெனக்கூ
ற வியலாசர், நண்ணுமறையினுல் சுக்கூறுசெய்து நாயன்றனக்கெல்லா
ம் புகழுமென்றார். (உஎஎ)

புகழும்புகழ்ச்சியு மரியவேதப் பொருளுக்கென்சொல்லிப் புக
ழ்ந்தென்னுக, மகிழும்புதல்வரை யியாமமட்டும் வையந்தனக்கேற்ற
மாகவைத்தே, யிகழும்பெரும்பாவந் தனையுந்தீர்ந்த இறைக்குப்புக
ழெல்லா மென்றாரப்போ, ரெகிழுந்தரித்திடு மதயானைக்கு நிகராம்அ
லியுல்லா நிகழ்த்தலுற்றார். (உஎஅ)

புவியிலடங்காத பெரும்பாதகம் பொருந்திமதயானை தனைப்பிடி
த்துக்,கெவியில்வீழ்த்தாட்டும் பரிசுபோலக் கெடுத்துமதுபானங் கொ
டுத்தபாவக், கூவியலெனும்பொல்லாக் கொடியவனைக்கொண்டுவருகெ
ன்றார் சிலதியர்கள், சவிகெட்டிடும்பாவி தனைப்பிடித்துச் சாலேவழியா
கக் கொண்டுவந்தார். (உஎகூ)

கொண்டுவரும்போது நீதியுள்ள கோமானுமறலி தம்மைக்கூவி
த்,தண்டுமெருவார்கள் முடிசிதறத் தாக்குமலியேநம் பாலகரைச்,செல்
வமணமலர் மேனியெல்லாஞ் சிறப்புத்தரும்கபன் செய்தடக்கம்,கல்
வேருமட்டுமிவனைப்பொல்லாக் காவல்தனில்வைப்பீரெனவுரைத்தார்.

வைப்பீர்கடுங்காவல் தன்னிலென்ன மன்னருரைத்தபோ தலிப்
புலியார், தைப்பீர்விலங்கென்று ரேவலர்கள் தனைபூட்டிச்சிறை தனில
டைத்தார், மெய்ப்பீரெனவரு முமறுகத்தாப் விரும்புந்திருப்பாலர் த
மையெடுத்து, மைப்போலிருண்டபூங் குழல்மடமான் வைகுந்திருமா
டம் புகுந்தனரே. (உஅக)

பாலர்தமைநோக்கியரசர்கோனும் பதியிலுளபேரும் பரதாபமா
ய், வேலைநிகராகத் திருப்பொருந்தும் வீடுதனில்வந்த தேதெனவே,
நீலவிழிமாஞர் மனப்பதறி நிற்குமோசத்தி லுமறுகத்தாப், கோலமலர்
மேனிப் பாலகரைக் கொடுத்தார்திடுக்கமும் மழுதனரே. (உஅஉ)

அறிவுக்கடலேநின் குலக்கொழுந்தே யழகுமதியமேயாரணமே,
மறுவற்றிடுமத நவைவீசிய மகனேபுகழ்க்கொரு மணிவிளக்கே,நெறி

தப்பிதமாக கொடியவன்சொல் நிசமென்றவன்கையின்மதுவுண்டதா, ஹுறுதிப்புவியாசை யிழந்தரும்பொன் னூருக்கெழுந்திரோ வெனவழுதார். (௨௮௩)

இந்தார்முகந்திரு மகனேயுன்றே டிசாங்கிவிளைபாடும் பாலனொன்முன், வந்தாலென்மனந் திடுக்கிடுமே வரும்பாலகர்மணி வாய்திறந்தே, யெந்தோழரொக்கே போறனென்று சேல்துமொழிவேனென் னினியரசே, சுந்தாமணிசொர்க்கப் பதியையினம் நாடிநடந்திரோ வெனவழுதார். (௨௮௪)

ஆரமணித்திருப் புயனேமுன்னு ளழகுசெறிவீதி தனிலேகிய, நேரந்தனில்வந்த பலனிதுவோ நீதியறியாத கொடியபாவி, வாரமுடனழைத் தமக்களித்த மதுவோமவுத்தாக விளைந்ததுகாண், பாரமறியாத சிறுவயதிற் பாரையிழந்திரோ வெனவழுதார். (௨௮௫)

இன்பரிடமெல்லாம் புகழ்வரு மிளவல்தனக்கேங்கி யிளங்குயிலார், அன்பழுதவாடிப் புலம்புநேரந் தோன்றலசுகாபி மானாநோக்கி, வம்புதருந்திருப் புயத்தினொன்றன் மகனைக்குளிப்பாட்டிக் கபனுஞ்சூட்டித், தம்பமெனுநாயன் றனைத்தொழுது தரையிலடக்குவோ மெனவழுதார். (௨௮௬)

புவிமாநெருந்துறை தனிலினைக்கப் புவியாளரசர்கோ ஹுவைத்திடவே, பொலிமாமறைதெரிந் தெழுதும்வல்ல வுதுமான்அலிப்புலி அசனுசைனுஞ், சலியாமனத்தினூர் அசுகாபிமார் சகலபெரியோர்கள் சூழ்ந்துநின்று, கலிமாவுரையென்று முழக்கமாகக் கழுவிக்குளிப்பாட்டிக் கபனுஞ்செய்தார். (௨௮௭)

சிறக்குங்கபனிட்டு வாசமூட்டிச் செவ்விவிழியினிற் சுறுமாவிட்டுத், துறக்காச்சந்தாவை யேந்தியாருஞ் சுமந்துநடந்தேகித் தூயவேந்தர், நறைக்குங்குமமார்பைப் புயத்திறசூல் நபியின்றவுலாவி னிறக்கிவைத்துப், பொறுக்கும்புகழ்வேத நாயகனைப் புகழ்ந்துதொழுதேற்றிப் போற்றினரே. (௨௮௮)

சலதிப்புவிவேந்த ருமதுகத்தாப் தாமங்கிமாமாகத் தொழுவித்தபின், பலதிக்கிலும்வேத நெறிநடத்தும் பாரப்பயகாம்பர் நபிதிருத்தாளின், வலதுபுறமாகக் கபுருண்டாக்கி மறையினெறியோர்கள் மாதவத்தோர், தலைமைப்பெரியோர்கள் தழுவித்தாங்கி சறகினெறிபோல வடக்கினரே. (௨௮௯)

மட்டிலாப்புகழபூபக்கர் மன்னையடக்கிப்பின் னுமறுகத்தாப், திட்டமுறைக்கொரு நாயகிடஞ் செய்தார்துவாகளை முறைமதனை, அட்டதிசைபோற்றும் நபிமார்க்கெல்லாம் மாசென்றனுப்பிய ஆண்டவ

னே, துட்டர்பிழையெல்லாம் பொறுத்ததிக சுவனந்தனிலாக்குந் தூய
யவனே. (உகூ0)

துவர்க்கமுடிவுமில்லாதவனே துணையாமிறைவனே யிணையில்
லானே, யெவர்க்குந்தெரியானே வணக்கமுள்ளோ ரிதயமதுதனி லி
ருப்பவனே, தவக்கலிறையோனே யெனதுபாலர் தன்னையாமத்து
நாளையிலே, சிவக்குங்கதிர்க்காந்தி வெளியிடம்பங்கஞ் செய்யாதருளெ
ன விரந்தனரே. (உகூக)

ஆயமறைதனி லிறைவனீதான் சொன்னபடியெல்லாம் அடிக்கு
முன்னே, காயம்பொறுக்காம லுயிரிழந்தார் கணக்கிலிருபது அடியுள
து, மாயுமவர்களை யடிக்கவிதி மறையிலில்லாதால் விட்டேனென்றனை,
சேயின்பிழைபொறுத் தருட்கிருபை செய்வாயெனத்துவாச் செய்த
னரே. (உகூஉ)

வல்லதொருநாய னிடந்தனிலே மகனுக்குறந்துவாச் செய்தபி
ன்னர், நல்லநெறியில்லா எகுதிதனை நாளையழைத்துநாம கேட்போமெ
ன்னப், புல்லென்றெதிர்காபிர் சிரமுருளப் பொருதுமரசர்கோ னுமது
கத்தாப், செல்லென்றருட்கொடைத் தலைவர்சூழத் திருமாளிகைதனி
ம் புகுந்தனரே. (உகூங)

தூய்யமணிமாடந் தனிற்புகுந்து சொல்வாருயிர்க்குயிர்த் தோழ
ருடன், வையமதிலொரு மவுத்தல்லாமல் மடியாதிருப்பவரொருவரில்லை
தொய்யும்படியழு திரன்குமது சுருதிப்பொருட்கேராதெனவருளி, வை
யமறவாழுந் தவத்திறேரே யடைவீரவரவர் மனையிலென்றார். (உகூச)

ஓங்கலெலும்புயத் துமறுகத்தா புணர்த்தபொழுதினி லொழுக்கு
டைய, பாங்கருதுமாற ரசர்தம்மைப் பணிந்தங்கவொழுந் தருளின
ர்பின், வேங்கையனையாரும் அசனுசைனும் விடைவித்திருமணி வீடேக்
கார், தீங்கொன்றணுகாத பார்களெல்லாஞ் சென்றாரவரவர் மாளிகை
க்கே. (உகூரு)

வாரிக்கராமென் றனைவோர்களு மாடந்தனக்கெழுந் தேகியபின்
காரிருண்டழுங் குழலிமலர்க் கன்னியுடன்வேந்தர் கவல்வாரிந்தப்,
பாரிலருந்தவம் புரிந்துபெற்ற பாலொவரோறு மிருந்ததுண்டோ, நீரி
ற்குமிழிபோலுலகின்வாழ்க்கை நில்லாதெனப்பின்னுமிகழ்த்தலுற்றார்.

பொன்றிவிடும்பால ரபூஷகமா புதியோன்கருணைசேர் பொன்னூ
ரிலே, சென்றுபுகுந்தார்நா மவர்க்கிரங்கிச் சிந்தித்தழுவது வேண்டா
மென்ன, மன்றல்திருப்புயத் தரசர்கோமான் மடமான்றனக்குரை வழ
ங்கிமனம், வென்றியுடனினி திருக்குமேரம் வெய்யோன்குடதிசை பு
குந்தனனே. (உகூஎ)

காயுங்கதிர்புகுந் தலகமெல்லான் கங்குல்பரந்தீண்டக் கலைமதிய ந்,தோயந்தனிலெழுந் திருவிளயுலவு சுடர்வானகமெல்லாந் துலங்கிடிம் ந,வாயும்புகழ்நாயன் புவியிடத்தி லமைத்தபடைப்பெல்லா முறங்கக்க கல்,பாயும்பரிவேந்த குமறுகத்தா யன்னிதனிற்புகுந் துறங்கலுற்றார்.

வனசமலர்ப்பாத குமறுகத்தாப் வரிக்கல்லேயில்காலே மாசிலாத, கனகமணிமேடை மாணிக்கமேற் கட்டிப்பசுந்துகிற் கால்சிவந்த, பன கமணியாலே திடஞானம்படைரமணம்வீசும் ஆசனத்தில், நனைவுதனிற் றோற்றும் சூலைபோலவே நயினார்முஹம்மதக் கிருக்கவுமே. (௨௯௯)

வலதுபுறந்தனி லப்பக்கரும் வள்ளலிடதுபா ரிசந்தனிலே, நல வுதரும்புகழ் அப்பாசுமாய் சுமிக்குநடுமுன்னம் அபூஷக்மா,பலதுமகி ழ்ச்சிகொலவிருந்தவர்கள் பழக்கம்புகலவும் பயகாம்பர்தம், இலகும் விழியிறு லிவரைநோக்கி யெதிர்கொண்டவர்கட்டித் தழுவவுமே. ()

கட்டித்தழுவிமுன் னிருத்திடவும் கபீபுநபிதிரு முதுவல்செய்து, மட்டிலடங்காத புகழ்தரித்த வரிசைப்பெரியோறும் வானோர்களும், தட்டிநடக்காதநபிமார்களும் சறகுதவிராமல்நீர்நடத்தும்,கெட்டிதனை க்கண்டு பிரியமுடன் கிருபைதருமத்துச் செய்தாரொன்றும். (௩௱௧)

திருக்குக்குபிரோர்கள்தனைமுருக்குஞ் செங்கோலுமறெனுஞ்செ ல்வராவே, ரிருக்குந்தலமென்ற விடத்திலென்ன இறசூல்முஹம்மத ரியம்பிடவும், பெருக்கும்புதுமைசேர் கனவுகண்டு பிரியக்கடலாகிப் பேரமுகி, னிருக்குமகனுடன் கனவினிலே யெழிலாரொருமொழி பே சலுற்றார். (௩௱௨)

மதியமெனும்வாகு மறைநெறியும் வளருமகனேநீர் மதுவையுள் ள, பதியிலடிபட்டு மவுத்தானவர் பசும்பொன்னகர்மீதி லிருக்குமந்த விதியின்பலனேது புகல்வீரென்ன வேதநெறிவேந்தர் விளம்பினர்நேர் கதியும்பெருவாழ்வுந் தரித்தமகன் கனவுதனிலெடுத் துரைக்கலுற்றார்

சறகுதவிராத திருத்தாதையே தமியேன்றனையந்தசபையிடத்தி லீறகுதுடித்தாப்போ லுடல்துடிக்க விரங்காதடித்திர்நான் மவுத்தாகு ன, மிறகுருறையடிக் கிறைவன்பாலிற் சூறுந்துவர்கீங்கள் கேட்டதினு ற், பறையுமென்பிழை பொறுத்துச்சொர்க்கப் பதியிலாக்கினு னென் றுபின்னும். (௩௱௪)

அடிக்குமடியைநீ சிரக்கிவிட்டா லரியபெரியதோர் நாயனுனை, நடக்குஞ்செயல்தப்ப நடந்தோர்களே நாட்டுங்கடுந்தியில் வான்விழுந் து,கிடப்பேனெனுதிந்தில்லை யிப்போநாயன் கிருபைப்பதிசொர்க்க மெ னக்களித்தான், திடக்குன்றெனுமெந்தா யுமதுமனத் திர்க்கமதனுனெ ன்றுரைத்தனரே. (௩௱௫)

சொர்க்கம்புகுந்தவா றுமனதிருத் தோழரனைவர்க்கு மெடுத்தருளி, வர்க்கமுடனென்றன் சலாமனைத்தை மவுலுமெனத்தாதை மனுமியத்தில், இக்கென்றருள்பால ரபூஷிகமா விபம்பமணமகிழ்ந் தினிதெழுந்து, துக்கமறவேத நாயகனை சுபுகுதொழுதபின் விடைந்தனவே.

பருதியெழுவாளி லிதித்தபிள்ளைர் பாலர்வரலாற்றை யனைக்குரைத்துச், சுருதிதனைத்தெரிந் தெழுகவல்ல துங்கமனத்திறு ருதுமானையுங், குருதிசொரிவடி வாள்கரத்தார் கோமன்அலிப்புலி அசுகாபிமார், வருதிரெனக்கூறிவருவீரென்ன வள்ளல்பிலாலுட னுரைத்தனரே. (௱௭)

வேந்தருணாமற்று தெழுந்தங்கேரம் பிலாலுமதினமா நகர்வீதியிற், சேர்ந்துபறைகூறி வருப்வேளையிற் றிறல்சேருதுமானு மலிப்புலியும், ஆய்ந்தமறைதேரும் அசனுசைனையும் அசுகாபிகளுமோ ரலெகடம்போல், போந்துமறைவேந்தர் தமைப்பணிந்து புகலிரமைந்தவா றெனப் புகன்றார். (௱௮)

என்னைப்பிரியாத தோழமாரே யிரவிற்றுயிற்காலையெனதியாலர், தன்னைக்கனகமா நகர்தனிலே தருமநபியும்வி றறும்அப்பாசும், வன்னமலர்ப்பாத ரபூபக்கரு மவனுமுடன்பேசி மகிழ்ந்திருக்க, மின்னைப்பொருமேலீர் கனவுதனிற் கண்டேனெனப்பின்னும்விளம்பலுற்றார்.

இகலுமருவாரைப் பொரும்வடிவே லேந்துமெனதுயிர்த் தோழமாரே, சகலஜனத்திற்கு மபூஷகமா சலாமுமருள்வீரென் றறைந்தமாற்ற, மகிலந்தனிலுள்ள மனுவோர்க்கெல்லா மருளினேனென்ன வரசர் கோமான், புகலுமொழிகேட்டுச் சனங்களெல்லாம் பிரத்திசொலிவெரு புளகமுற்றார். (௱௯)

புளகமுறும்வேந்த ருமறுடனே புதியோன்புவியலி புகலலுற்றார், களபத்திருப்புய நபியுல்லாவுங் கருணையபூபக்க ருடன்அப்பாசும், அழகுசெறிந்திடும் பாலகனுர் அரியவபூஷக மாவுடனே, அழகென்றியல் பெற்ற மணிமேடையி லாகமகிழ்ச்சிகொண் டிருக்கவுமே. (௱௰௧)

பெரியோர்புகழ்ந்தேற்று மிறகுலேந்தப் பிள்ளையபூஷக மாதமக்கே, அரியாசனமும்நல் தறஜாத்தும்பெற் றதுவுமவர்தாதைக் கருளெனவும், புரியாடரவுரும் புவிகொள்ளாத பொல்லாளெனுதியைப் பிடித்துவந்து, மரியாதையினுடன் கலிமாச்சொல்ல மவுலுமிணங்கானெப் வதைப்பிரென்றும். (௱௰௨)

சங்கையெனுந்தினி லானமூமீன் றனக்குப்பலிகத்துஞ்சோதனையும், பொங்கும்புகழான றகுமத்தையும் புதியோனருளுவா னதுவல்லாமற், பஞ்சமெகுதியைப் படித்துமது வேண்டாமெனவபி பகர்ந்திடவு, மெஞ்சலுறநகையிற் கண்டேனென வேகன்புலியலி விளம்பினரே.

அறுசித்புலியலி கூறியபோ தருமதூறகுல்தம் மருகாரனே, ருத்
திதரும்வேதக் கடலனைய வுதுமான்புவிராஜ ருமறைநோக்கி, முறசர்
கரசான பியுல்லாவு மூமினெனுமந்த மூன்றுபேரு, மறவர்ஞெளிர்
மேடைத் தனிலிருக்கக் கவ்டேன்மனுமென வகுத்துரைத்தார். (

முதன்மைத்திறலான மூன்றுபேரு முகம்மதூறகுல்நங் கயியுட
னே, பரமத்திருமேவும் புயம்பூரிக்கப் பாலசபூஷக மாவுங்கூடி, இ
மொத்தழகான சுவனபீழ் லிருக்குமனுங்கண்டா ரெனுமுறையால், 
தமுற்றுணங்காத வாரணம்போல் அசுகாபடங்களு மனதுகூர்ந்தார். (

கன்பூடுருகாத மதிஜுவுள்ளோர் கருணைபொருந்தினி திருக்கு
ப்போ, கன்பேபெதனப்பெரும் பழிசுமக்கத் தானேமனதுகொள்ளெ
ளிநிகழு, மன்பூண்டரித்திடும் பாலருக்கு மதுவைக்கொடுத்திடும் ப
தகனைப், பின்யோடரசர்முன் கொடுவாவெனப் பெரியோன்புலிய
யுரைத்தனரே. (கூாலகு

உரைத்தமொழிகேட்டுச் சிலதியர்களோடிச்சிறைச்சாலை யிருந்
லனைப், பருத்தகயிற்றினுற் பிணித்துவந்து பார்வேந்துமறுமுன் னி
த்தியபின், விரைத்தமணிமார்ப ரலியவனே விளித்துக்கலீமாவை வி
ம்பெனவே, கிரைத்தமனவஞ்சக் கொடியபாவி நின்றங்கொருமொ
நிகழ்த்தலுற்றான். (கூாய

உங்கள்நெறிமார்க்கந் தனில்வரவென் னுள்ளம்பொருந்திமேன
கையாலே, கன்களடங்காத வடிவுசேருங் கானமதுவுண்ட காரியத்
தி, புன்கள்படவடித் துயிர்பறித்துப் போட்டீர்மதுவிடப் பொருந்
மாட்டேன், நங்கள்ளருந்திட விடைதந்தீரால் நாட்டுங்கலிமாவை ந
ல்வேனென்றான். (கூாய

பொல்லாங்குருக்கொண்ட கொடியபாவி புகலுமொழிகேட்
புலியலியார், வல்லான்றனக்கோ துரைத்தானென்று வடிவாட்ட
கிளை யிடகினைத்தார், செல்லார்குடையிட லதில்நடக்குஞ் சீமானபி
ம னுமறுகத்தாப், கல்லானதுகளைந் தருகவாங்கு கல்லும்அலியாரு
குரைக்கலுற்றார். (கூாய

வஞ்சமனத்திறு னுரைப்படிக்கு வல்லோன்பொருத்தமும் 
ருக்தாததும், அஞ்சுதலிரங்கா ளிரவுதனில் அல்லாவறிவிப்பானது
ரைக்கு, மிஞ்சும்பெரும்பாவி தனைப்பிடித்தே விலங்கிலடித்துவை
திடுமெனன்னத், தஞ்சமெனும்வேத ருரைப்படிக்கே சாலைதனில்வை
த்தார் தளைபூட்டியே. (கூஉய)

நலங்கள்தரும்வேத நெறிநடத்தும் நன்மையறியாத பாதகனை,
விலங்குகளிலடித் திருக்குநேரமு வெய்யோன்முடதிசைக் கடல்புகு

தப்,பலன்கொள்புவிமீதி லுண்டாகிய படைப்புதட்கலுமூங்கவெ கு, நலங்களணிபுயத் துமறுக்த்தாப் நாயன்பள்ளியிலும்மகலு[illegible]ர்.()

உறங்குமரசரின் கனவுதனி லுடையோனறிவித்தா னு[illegible]மயர் க, இறங்கும்புறக்கானில் மதுணுவொன்று மெவுமல்கியாமரா ள[illegible] ட்டு, மறங்கட்புறமாகப் பேதலிப்ப தல்லவெனவுமுன் னனுப்பிவிட்ட, திறங்கள்தரும்வேதம் போலேயொன்றைத் திரும்புப்புகலுவ திலேயெ னவும். (௩௨௨)

விலகுஞ்செயலான காரியத்தைத் விருப்பமுடன்கூட்ட வேண்டா மென்றும், நடமெதன்றருளிய கருமந்தனை நழுவவேண்டாமெங் ஈரூரு மென்றுங், குலவும்புகழாள ருமறுகத்தாப் கொள்ளுந்துயில்தனிற் க னவுகண்டே, யிலகுமலர்விழி யுறக்கநீங்கி யெழுந்தார்கதிரோனு மெ ழுந்தனனே. (௩௨௩)

எழுவான்றனில்வெய்யோ னுகித்தபின்ன ரிறசூல்திருத்தோழமா ரெல்லோரும்,வழுவாமறைதேரு மரசர்சோமான் வைகுமணிமாடமி ந்துசூழ்ந்தார், முழுமாமதிபோலே யொளிதிகழு முகத்தார்கனவினை மொழிந்ததம்பின், றெழுவாளதிலுற்ற பாவிதன்னைப் பிடித்துவரவேந் தர் தொகுத்தனரே. (௩௨௪)

தொகுத்தமொழிமறு தேவலோர்கள் தொடர்ந்துசிறைச்சாலை யி ருந்தவனைப், பகுத்ததனைநீக்கிக் கரந்திடாமற் பாசந்தனிலாகப் பிடித் துவந்து, ஜெகத்திலடங்காத புகழ்தரித்த செங்கோலரசர்முன் னிறு த்தாரங்கு, மிகுத்தமதிவேந்த ரவனைக்கூவி விளங்குங்கலிமாவை வி ளம்புகென்றார். (௩௨௫)

என்றமொழிகேட்டுக் கொடியபாவி யிசைப்பா னெளியேன்முன் னியம்பியதை, நன்றதெனச்சொல்லி விடைதந்திரால் நவில்வேன்கலி மாவை நாவினாலே, யன்றுமதுவுள்ளப் பொருந்தாவிட்டா லரியகலி மாவைப் பகரேனெனப், பொன்றுமனதுகொண் டவனுரைக்கப் புலி யாம்அலியுல்லா புகல்வதானார். (௩௨௬)

மற்றநபிமார்கள்வேதம்போலே வள்ளல்முஹம்மதுநபிதமக்குக், கத்தனிறக்கிய திருவேதத்தின் கருமமொருசிறு காரியத்தை, மெத்த லெவ்காமென் றயர்ந்துவிட்டா னல் மேலோன்பொருத்தக்கே டாகுமெ னச், சுத்தரலிகோபத் துடனவனைச் சுடர்வாட்கிரையிடத் துணிந்தெ ழுந்தார். (௩௨௭)

எழுந்தசுடர்வீசுந் தாரைவாளை யெகுதிதலைமேல்வைத்திகுபகு ப்புரய்ப், பிளந்துமதினமா நகர்தனக்குப் புறத்திலேயெடுத் தெறிந்து

விட்டாங் விழுந்தரகடாத் திரமாகினன் வேதநெறிதேரு முமறுகத் தாப், தெளிந்மனதுகொண் டிறையோனையுங் கோமானபியையும் புகழ்ந் கொண்டார். (௩௨அ)

பசும்பொன்னணிமார்ப ருமறுகத்தா பாலர்தனக்கொரு பாயமாகக், கசிந்துகனிந்தூறு மதுவையூட்டிக் கலகம்விளைத்திடுங் கருதலனைத், தசும்புமனதுட னலிப்புலியார் துலைத்தாரொனுமாற்றந் தனையறிந்து, விசும்பிளிமையோருந் புவியுள்ளோரும் விளம்புமானந்தக் கடல் குளித்தார். (௩௨௯)

கருணைத்துணைகொண்ட ருமறுபாலர் கனகப்பதிதனிற் புகுந்தாரென்ன, வருண்கண்ணார் சூழ்ந்திருக்கும் வையந்தனிலுள்ளோர் மனதுசூர்ந்தே, பொருண்மேவுத் திருவேதச் சடங்குமற்றப் புலன்கள்முடித்தவர் பொருட்டினாலே, யருளப்பிரவைசேர் மதினமுள்ளோ ராகமகிழ்ச்சிகொண் டினிதிருந்தார். (௩௩௰)

அரசருமதின்ற அபூஷகமா வரும்பொன்னகர்மீதி லானுரென்ன, வரிசைநபிதோழ மாரெல்லோரு மனதுகளிகூர்ந்து பிரியமாகி, விளைசெயமலர்ப்புயத் தரசர்கோமான் விடைகொள்ளவரவர் வீடுபுக்கி, புரிசைசூழ்மதினா புரத்தினிலே வுலகினிலினிதூழி வாழ்ந்திருந்தார். ()

வெண்ணிலவுமென்ன குபிர்க்காபிரை வெட்டிப்புகழ்நாட்டி வீறுதருஞ், செங்கோல்நடாத்திய வுமறுகத்தாப் செல்வராழகாரும் அபூஷகமா அங்கோர்மனைசேர சுவனமீதி லானாரெனத்தின மகமகிழ்ந்தே, சங்கோலிடும்வீதி மதினநகர் தன்னிலினிதூழி வாழ்ந்திருந்தார். (௩௩௨)

வேதநெறிதேரும் அபூஷகமாவிளங்குஞ்சரிதையை மேதினியில், நீதமுடன்கூற வுரைசெய்தோரும் நினைவுதவிராமற் படித்தபேருங், காதலுடனேதானெழுதினோருங் கவிதைதனிலுள்ள களங்கந்தீர்ந்தே, யோதுமெனக்கேட்டு மகிழ்ந்தபேரு முலகிலினிதூழி வாழிதானே. ()

——*——

# அபூஷகமாமாலை

முற்றுப்பெற்றது.

—0*0—

இராமநாதபுரம்

இரவுன்ஷாப்புக்கடை

ப-வெ-முகம்மது இபுறாகிம்சாகிபு

அவர்கள்முயற்சியால் அச்சியற்றியது.

116885

3307